1·6·55

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



# செய்திகள்

## குழந்தைகள் சினிமாப் பட உற்பத்திச் சங்கம்

குழந்தைகளுக்கான சினிமாப் படங்களைத் தயாரிக்கவும் அவற்றை விநியோகிப்பதற்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய இந்திய சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள். இதை முன்னிட்டு, சினிமாப் பட உற்பத்திச் சங்கம் என்ற ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தின் முதல் நிர்வாக சபையின் தலைவர் பண்டிட் ஹிருதயநாத் குன்ஸ்ரு. தென்னாட்டைச் சேர்ந்த இருவர் இந்த நிர்வாக சபையில் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த நிர்வாக சபையில் குழந்தைகள் பத்திரிகைகள் நடத்துவோருக்கான பிரதிநிதிகள் யாரையும் காணோம். இதன் முக்கியத்தையும் அவசியத்தையும் யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. குழந்தைகளுக்கான சிறந்த பத்திரிகைகள் நீண்ட நாட்களாக, வெற்றிகரமாக நடத்தப்படுவது தமிழ்நாட்டில்தான். சினிமாப் பட உற்பத்திச் சங்கம் உண்மையில் வேலை செய்வதாக இருந்தால் அதற்கு இவர்களுடைய அநுபவங்களும் யோசனைகளும் ஆதரவும்கூடத்தான் அவசியம் வேண்டும். குழந்தைகள், குழந்தைகள் என்று பேசுவது இப்போது பாஷனாகிவிட்டது. உண்மையில் செயலாற்றும் திட்டமும் வழியும் இன்னும் சரியாக உருவாகவில்லை. இது வருந்தத் தக்கது.

## துப்பாக்கி மர்மக் கதைகள்

டேவிட் ட்ரூ என்பவன் நியூயார்க் மாணவன். வயசு பதினாலு தான். இவ்வளவு சிறிய பையன் தன் ஏழு வயசுத் தோழன் ஒருவனை என்ன செய்தான் தெரியுமா? சித்திரவதை செய்து கொன்றுவிட்டான். இதற்குக் காரணத்தைப் போலீஸார் கண்டு பிடித்துவிட்டார்கள். துப்பாக்கிக் கதைகளையும் சித்திரவதைகளும் மர்மங்களும் நிறைந்த கதைகளையுமே அவன் எப்போதும் படிப்பானாம். அதனாலேயே அவன் புத்தி கெட்டுவிட்டது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

## மிருகக் காட்சி சாலைக்கு வயது 100

சென்னை மிருகக் காட்சிசாலைதான் இந்தியாவிலேயே பழமை வாய்ந்தது. இதை எட்வர்டு பால்பர் என்பவர் 1855-ஆம் வருஷம் நவம்பர் 23-ஆம் தேதி தோற்றுவித்தார். கர்நாடக நவாப் கொடுத்த புலிகள், சிறுத்தைகள் முதலிய சில மிருகங்களுடன் தொடங்கப்பட்டது இந்தக் காட்சி சாலை. இப்போது இங்கே நீர் யானை, மனிதக் குரங்குகள், ரஷ்யக் கரடிகள் உள்பட 640 மிருகங்கள் இருக்கின்றன. தினம் நூற்றுக்கணக்கான மக்களுக்கு இது ஆனந்தம் கொடுத்து வருகிறது. இந்தக் காட்சி சாலையின் நூற்றாண்டு விழா இந்த வருஷ இறுதியில் கொண்டாடப்பட இருக்கிறது. இந்தக் காட்சி சாலையை, சென்னைக் கார்ப்பரேஷன் நிர்வகித்து வருகிறது.

## 1956-இல் மகாமகம்

அடுத்த வருஷம் பிப்ரவரியில் கும்பகோணத்தில் மகாமக உற்சவம் நடைபெற இருக்கிறது. மகாமகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பகோணத்தில் நடைபெறுகிறது.

## சம்பூர்ண ராமாயணம்

கீழ்ப்பாக்கத்திலுள்ள அரசாங்க இளம் குற்றவாளிகள் (பெண்கள்) சீர்திருத்தப் பள்ளியின் ஆண்டு விழாவில் ராமாயண நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது. ராமாயணம் முழுவதையும் 15 நிமிஷங்களில் பள்ளிச் சிறுமிகள் சிறப்பாக நடித்துக் காண்பித்தனர்.

கண்ணன்

## பொருளடக்கம்

**மலர்: 6** **இதழ்: 11**

**1 - 6 - '55**

| | |
|---|---|
| குழந்தைகளே! | பக்கம் 2 |
| குண்டுச் சீமா | .. 3 |
| நல்ல பொம்மை | .. 8 |
| காதொலிக் கருவி | .. 9 |
| ரெயிலில்.. | .. 12 |
| குலவித்தை | .. 13 |
| பெருந்தன்மை | .. 19 |
| பால சோதிடம் | .. 21 |
| பாலர் கவியரங்கம் | .. 23 |
| மன மாற்றம் | .. 24 |
| அட்டைப் படம் | .. 28 |
| சண்டை தீர்ந்தது | .. 29 |
| பாரஸீக ரோஜா | .. 33 |
| லீடர் மணி | .. 35 |
| எங்கள் பகுதி | .. 39 |

செய்திகள் - 2 - அட்டை
அதிருஷ்ட எண்கள்-3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ: 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## 1 - 5 - 55

## அதிருஷ்ட எண்கள்

| | | | |
|---|---|---|---|
| முதற் பரிசு | | .. | 9068 |
| 2-ஆம் பரிசு | | .. | 11661 |
| 3-ஆம் பரிசு | 1. | .. | 6513 |
| | 2. | .. | 1008 |
| | 3. | .. | 6600 |
| 4-ஆம் பரிசு | 1. | .. | 659 |
| | 2. | .. | 11521 |
| | 3. | .. | 5593 |
| | 4. | .. | 11384 |
| | 5. | .. | 7653 |

மே 1-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்கு மேல் அனுப்பினால் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

# குழந்தைகளே!

கண்ணன் புதிய தொடர்கதை 'குண்டுச் சீமா' பிரமாதமாக ஆரம்பமாகியிருக்கிறது என்று நூற்றுக்கணக்கான குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். சந்தோஷம். கடைசி வரையில் குண்டுச் சீமா உங்களை மகிழ்விப்பான் என்பதில் சந்தேகமில்லை.

அதிருஷ்ட எண்கள் என்பதை இன்னும் பல குழந்தைகள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. சந்தேகங்களைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இங்கே மீண்டும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

இந்த இதழில் மூன்றாவது அட்டையைப் பாருங்கள். அங்கே குறுக்காக ஓர் எண் அச்சிடப்பட் டிருக்கிறது. இதேபோல எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் ஒவ்வோர் எண் அச்சாகியிருக்கும். ஒன்று முதல் பதினைந்தாயிரம் வரையுள்ள எண்கள் இவ்விதம் அச்சாகியிருக்கின்றன. இதிலே அதிருஷ்ட எண் எப்போது தெரியும் என்றால் சரியாக முப்பது நாள் கழித்து, கண்ணனிலேயே வெளியாகும். இந்த இதழ் 1-6-55 அல்லவா? இதன் அதிருஷ்ட எண்கள் என்று பத்து எண்கள் 1-7-55 இதழில் பொருளடக்கம் என்ற பக்கத்தில் வெளியாகியிருக்கும். அந்தப் பத்து எண்களில் உங்களிடமுள்ள (1-6-55 இதழ்) கண்ணனில் வெளியாகியிருக்கும் எண் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இருந்தால் உடனே எங்களுக்கு அனுப்பி அதற்குரிய பரிசுத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் இதழிலும் கட்டாயம் பத்துப் பேர்களுக்குப் பரிசு கிடைத்துத்தான் தீரும். அப்படியானால் ஒரு மாதத்துக்கு இருபது பேர்களுக்கு நிச்சயம் பரிசு கிடைக்கும். அநேகமாக, கண்ணன் வாங்கும் எல்லாக் குழந்தைகளுக்குமே ஒன்றில் இல்லாவிட்டால் இன்னொன்றில் பரிசு கிடைத்துவிடும். சில பேருக்கு உடனே கிடைத்துவிடும். பல பேருக்குப் போகப் போகக் கிடைக்கும். இவ்வளவுதான் வித்தியாசம்.

நீங்கள் வாங்கும் கண்ணனில் உள்ள எண்ணை எவ்வாறு அறிவது? சிலருக்கு அதுவும் சரிவரத் தெரியவில்லை. உதாரணமாக, 6050 என்ற எண் கண்ணனில் 06050 என்றுதான் ஐந்து ஸ்தானமாக அச்சாகியிருக்கும். 336 என்ற எண் 00336 என்றுதான் அச்சாகியிருக்கும். அதனால் எண்ணுக்கு முன்னாலுள்ள பூஜ்யங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அவைகளுக்கு மதிப்பில்லை. நீங்கள் வாங்கியிருக்கும் கண்ணனில் 00049 என்று எண் அச்சாகியிருந்தால் அது வெறும் 49 என்றுதான் அர்த்தம். 00409 என்று இருந்தால் அது வெறும் 409 தான். புரிந்ததா?

இனி, அதிருஷ்ட எண்ணுள்ள கண்ணன் உங்களிடம் இருந்தால் அதை எங்களுக்கு உடனே பத்திரமாகக் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். முதற் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசுள்ளவர்கள் ரிஜிஸ்தர் தபாலிலேயே அந்தக் கண்ணனை அனுப்புவதுதான் நல்லது. இல்லாவிட்டால் தபாலில் தவறிப் போக இடம் உண்டு. நாலாவது பரிசுள்ளவர்கள் மட்டும் சாதாரணத் தபாலில் அனுப்பலாம்.

கண்ணன் படிக்கும் குழந்தைகளைக் குதூகலத்தில் ஆழ்த்திய 'அசட்டுப் பிச்சு' இப்பொழுது புத்தகமாக வெளிவந்துவிட்டது. விலை ஒரு ரூபாய்தான். 128 பக்கங்கள். உங்கள் ஊர் கண்ணன் ஏஜெண்டைக் கேளுங்கள். இல்லையானால் முன் பணமாக அனுப்பலாம். புத்தகத்திற்குத் தபால் செலவு இல்லை. தபாலில் பணம் (V. P. P.) கட்டிப் பெற்றுக் கொள்வது என்றால் 7 அணு அதிகமாக அநாவசியமாகச் செலவாகும்.

—ஆசிரியர்.

# குண்டுச் சீமா

## ராஜி



எங்கப்பாவைப் பார்த்து, ''சார், என்னை மன்னித்துவிடுங்கள். நான் ஏதோ தெரியாமல் சொல்லி விட்டேன். என்னைப்பற்றி இந்தப் பையன்களை யெல்லாம் கேட்டுப் பாருங்கள். ஏன், உங்கக் குண்டு... இல்லை, இல்லை.. சீமாவைக் கேட்டுப் பாருங்கள்'' என்றான் வைத்தி. பிறகு அங்கே உட்கார்ந்திருந்த என் பாட்டியைப் பார்த்து, ''பாட்டி! என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்றான்.

பாட்டி அவர்களை யெல்லாம் திண்ணையில் உட்காரும்படி சொன்னாள். என் அப்பா ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பவர்போல் இருந்தார்.

உடனே, நான் ''அப்பா, இவன்தான் முதலில் இங்கு வந்திருந்த என் வகுப்புப் பையன் வைத்தியநாதன். அவனை நாங்கள் எல்லோரும் வைத்தி என்று கூப்பிடுவோம். அதோ காதிலே கடுக்கன் போட்டுண்டிருக்கானே, அவன்தான் பாலு. கிரிக்கட் ஆட்டத்திலே எங்கள் பள்ளிக்கூடத்திலேயே அவன்தான் கெட்டிக்காரன், அவன் போல் பண்ணினா, யாரும் சீக்கிரம் ரன்கள் எடுக்கமுடியாது. எங்கள் கிரிக்கெட் கோஷ்டிக்கு அவன்தான் காப்டன். அதோ இருக்கிறானே குடுமி வைத்துக் கொண்டு, அவன்தான் ராமு. பள்ளிக்கூடத்திலே தமிழ்ப் பாட்டுக்களெல்லாம் சமயத்துக்கு ஏற்றாற்போல் இயற்றுவதில் மிகவும் கெட்டிக்காரன். உன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறானே, அவன் பெயர் ஆறுமுகம். உன்னிடத்தில் அடிக்கடி 'கன்ஸல்ட்' பண்ணுவதற்கு வந்துவிட்டுப் போவாரே கோபாலக்கவுண்டர், அவருடைய பிள்ளை அவன். பள்ளிக்கூடத்தில் எல்லாப் பாடத்திலும் முதல் மார்க் வாங்குவான். அடே கோபாலா, இங்கே வா! அப்பா, இவனைப் பார்த்தாயா? இவனும் என் வகுப்பைச் சேர்ந்தவன். நன்றாகப் பாடுவான். இவன் முகத்தோற்றம் ஒரு பெண்ணைப்போல இருக்கிறதனாலே, எங்கள் பள்ளிக்கூடத்தில் நடக்கும் நாடகத்துக்கு முக்கிய பெண் பாகத்தை ஏற்று இவன் மிகவும் நன்றாக நடிப்பான்'' என்று நான் எல்லாரையும் அறிமுகப்படுத்தினேன்.

''பையன்களா! சீமா பள்ளிக்கூடத்திலே நன்னாப் படிக்கிறானா, அல்லது டிராமா போடுகிறானா?'' என்று ஒரு கேள்வியைக் குறுக்கே போட்டு வைத்தாள் பாட்டி,

''நன்னாப் படிக்கிறான் பாட்டி'' என்று இரண்டு மூன்று குரல்கள் எழுந்தன.

''என்னத்தை நன்னாப் படிக்கிறான்? எப்போ பார்த்தாலும் விளையாட்டுப் புத்தி. டியூஷன் வேறு வச்சிருக்கு. வீட்டிலே அவன் எல்லோருக்கும் செல்லம். உங்களையெல்லாம் பார்த்தாவது அவனுக்குப் புத்தி வரட்டும்'' என்று சொன்னார் என் அப்பா.

நானும் அவர் எதிரில் கை கட்டிக்கொண்டு உட்கார்ந்தேன். எனக்கு அப்பாவிடம் ரொம்பவும் பயம். அவர் என்மீது பிரியம் வைத்திருந்தாலும் படிப்பிலோ, நடத்தையிலோ தவறி விட்டேனுல் லேசில் விடமாட்டார். மகா கண்டிப்பான பேர்வழி. வக்கீல் தொழிலிலே நிரம்பப் பணம் சம்பாதித்ததற்கும் செல்வாக்குடன் இருந்ததற்கும் தம்முடைய இடைவிடா உழைப்பும், திடமான தெய்வ நம்பிக்கையும். உண்மையைக் கடைப்பிடிப்பதும் தான் முக்கியக் காரணங்கள் என்று என் தகப்பனுர் அடிக்கடி சொல்லி இருக்கிறுர். நல்ல பழக்க வழக்கங்களினுல் ஆரோக்கியமாகவும் அவர் இருந்து வந்தார். அவருக்கு நல்ல முகவெட்டும் பேச்சு வன்மையும் உண்டு. அவர் பேசுவதில் உண்மை ததும்பி இருக்கும். எல்லாப் பையன்களும் ஆவலுடன் அவரையே பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

''பையன்களே, நீங்கள் ஒவ்வொருவரும் மிகவும் நல்ல பையன்கள். கெட்டிக்காரர்களாகவும் இருக்கிறீர்கள். சந்தோஷம், ஆனுல் அதோ கடைசியில் இரண்டு பேர் உட்கார்ந்திருக்கிறுர்களே'' என்று என் தகப்பனுர் சுட்டிக் காண்பித்தார். உடனே அவ்விருவரும் எழுந்து நின்றனர். நான், ''அப்பா, அவர்களும் மிகவும் நல்ல பையன்கள்தான். ஒருவன் பெயர் மாணிக்கம், இன்னெருவன் பெயர் தண்டபாணி'' என்று குறுக்கிட்டேன்.

''மாணிக்கம், தண்டபாணி! நீங்கள்தானே நேற்றுச் சாயந்தரம் கடைவீதியிலே வாழைப் பழத்தை வாங்கித் தின்றுகொண்டிருந்தீர்கள்?''

''ஆமாம், ஆமாம்.''

''அப்பொழுது நான், 'வாழைப் பழத் தோலை நடுரோட்டில் போடுகிறீர்களே. யாராவது அதன்மீது கால்வைத்து வழுக்கி விழுந்தால் என்ன ஆகும்?' என்று கேட்டது உங்களுக்கு ஞாபகம் வருகிறதா?''

''ஆமாம், சார்.''

''அந்தச் சமயத்தில் உங்கள் பள்ளிக்கூடத்து வாத்தியார் ஒருவர் கடை வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தார் அல்லவா? நீங்கள் அப்பொழுது அவரை என்ன பெயர் சொல்லிக் கூப்பிட்டீர்கள்?''

இந்தக் கேள்வியை என் அப்பா கேட்டவுடன் ஏதோ அவர்கள் மனத்தில் சுரீர் என்று பட்டது போலத் தோன்றிற்று. பதில் சொல்லாமல் இருந்தார்கள்.

''நாங்கள் மாத்திரம் கூப்பிடலே சார். அதோ முன்னுடி உட்கார்ந்திருக்கானே வேலாயுதம், அவனும் தான் கூப்பிட்டான் சார்.''

''நீங்கள் செய்த காரியம் தவறு என உங்கள் மனச் சாட்சி சொல்லுகிறதல்லவா? நீங்கள் அவரை என்னவென்று கூப்பிட்டீர்கள்?'' என்று மறுபடியும் என் தகப்பனுர் கேட்கவே, ''சுண்டைக்காய்'' என்று மெதுவாகப் பதிலளித்தான் வேலாயுதம்.




''பாவம், பள்ளிக்கூடத்திலே உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் முன்னுக்கு வரவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும் ஒரு வாத்தியாரை அப்படியா கூப்பிடுவது?

உங்கள் வயது என்ன, அவருடைய வயது என்ன? உங்களுடைய தாயு தந்தையரை விட வயது ஆனவர் அவர். முன் காலத்திலே வாத்தியார் என்றால் அவர் கையில் பிரம்பு இல்லாமல் இருக்காது. எங்களுக்கு அவரைக் கண்டாலே பயம். வாத்தியாரிடம் அப்போது இருந்த பயமும் பக்தியும்கூட அற்றுவிட்டது. நீங்கள் அந்தமாதிரி கூப்பிட்டது அவர் காதில் விழுந்திருந்தால் அவரது மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும்? நீங்களே யோசியுங்கள். எங்கள் வீட்டுப் பையனைக் குண்டுச் சீமா என்று கூப்பிட்டான் வைத்தி. எங்கள் வீட்டுப் பையன் பெயர் சீமாதான். அவன் குண்டாகவும் இருக்கான். அதனால் குண்டுச் சீமான்னு கூப்பிடுவது ஒரு வகையில் பொருத்தமாகக்கூட இருக்கிறது. ஆனால் இந்தப் பொருத்தமான பெயரை வைத்தி கூப்பிட்ட போதே சீமாவின் பாட்டி, தாத்தா, அம்மா, ஏன் எனக்குக்கூட எவ்வளவு கோபம் வந்தது? வைத்தி சற்று ஓடாமல் தாமதித்திருந்தால் அவனுக்குப் பூசை கிடைத்திருக்கும். சமவயதுள்ள அவனை நீங்கள் கூப்பிட்டபொழுதே எங்கள் வீட்டில் எல்லாருடைய மனமும் புண்பட்டதல்லவா? அப்படி இருக்கும்பொழுது உங்களுக்குக் குரு ஸ்தானத்தில் இருக்கும் ஒருவரை நீங்கள் இழிவாகக் கூப்பிட்டால் அவருடைய மனமும் அவர் வீட்டிலுள்ள மற்றவர்களுடைய மனமும் எப்படி இருக்கும்? உங்கள் கண் எதிரில் உங்கள் குறும்புத்தனத்தால் ஏற்பட்ட தீமைகளைச் சுட்டிக் காண்பித்தால்தான் நீங்கள் செய்த தவறு உங்கள் மனத்தில் பச்சை மரத்தில் அடித்த ஆணியைப் போலப் பதியும்'' என்று எங்கள் தகப்பனார் சொல்லியதை பையன்கள் யாவரும் மிகுந்த அமைதியுடன் கேட்டார்கள். அவர்களுக்கு ஒன்றுமே பேச நா எழவில்லை.

உடனே வைத்தி எழுந்திருந்தான். ''சார், நீங்கள் சொல்லியது, எங்கள் வாழ்க்கையிலேயே நாங்கள் மறக்க முடியாத புத்திமதி ஆகும்'' என்றான். மற்றப் பையன்களும் எழுந்திருந்து விடை பெற்றுக் கொள்ளும் பாவனையில் என்



தகப்பனுருக்குக் கைகூப்பி வணக்கம் செலுத்தினர். என் தகப்பனுர் ஆளுக்கு ஒரு மல்கோவா மாம்பழம் கொடுத்து அனுப்பினுர்.

## 2

''சீமா இன்று சனிக்கிழமை. எண்ணெய் தேய்த்துக் கொள்ள வா'' என்று கூப்பிட்டாள் என் பாட்டி.

வாரந் தவராமல் சனிக்கிழமை தோறும் என் பாட்டி நான் எண்ணெய் தேய்த்துக்கொள்வதில் அவ்வளவு அக்கறை கொண்டிருந்தாள். 'வைத்தியருக்குக் கொடுப்பதைவிட வாணியருக்கு கொடுப்பது மேல்' என்ற விஷயத்தைப் பெரியவர்கள் நன்ருக அறிந்தவர்கள். எனது பிற்கால வாழ்க்கையிலே ஒருவரும் சொல்லாமல் நானே எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் பொழுதெல்லாம் என் பாட்டியையும் என் தாயாரையும் நினைத்துக் கண் கலங்குவது உண்டு. அப்பொழுதெல்லாம் சனிக்கிழமை காலை ஒரு விசேஷ நிகழ்ச்சி நடக்கும். அதுதான் நான் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் காட்சி.

என் பக்கத்தில் ஒரு வால் கரண்டி நிரம்ப எண்ணெய் வைத்திருக்கும். என் எதிரில் பாட்டி கையில் எண்ணெயுடன், ''கிட்ட வாடா, கிட்ட வாடா'' என்று கத்திக்கொண்டிருப்பாள். நான், ''மாட்டேன் பாட்டி'' என்று கத்துவேன். உடனே தாத்தா, ''உனக்கு எட்டணு தரேன். இந்தா'' என்று கொடுப்பார். அதையும் வாங்கிக் கொண்டு, ''எனக்கு எண்ணெய் வேண்டாம்'' என்று கத்துவேன். உடனே என் அம்மா வந்து, ''பாவம்! தள்ளாத வயதிலே பாட்டி உனக்கு எண்ணெய் தேய்க்க வேணும்னு வந்து உட்கார்ந்திருக்கா. உனக்கு என்ன அவ்வளவு பிடிவாதம்?'' என்று துடையில் நிமிண்டுவாள் அம்மா. விரல் பட்டதும், 'கோ' வென்று அலறுவேன். இதைக் கேட்ட அப்பா மாடியிலிருந்து ஒரே ஓட்டமாக ஓடி வருவார். ''எண்ணெய் தேய்த்துக்கொள்வதற்கா இவ்வளவு அமர்க்களம்?'' என்று என்னை அடிக்கும் நோக்கத்துடன் நெருங்குவார். ''நன்னுருக்கு, நீங்க குழந்தையை அடிக்கப் போறது! எண்ணெய்த் தலையுடன் அவன் அழுது, ஜுரம் வந்தால் இங்கே யார் பாடுபடுகிறது?'' என்று என் அம்மா பரிந்துகொண்டு வருவாள். தன்னைத் தவிர வேறு யாரையும் என்னைத் தொடக்கூட விடமாட்டாள் அவள். என் அப்பா ஒன்றும் சொல்ல முடியாமல் கோபத்தை அடக்க முயல்வார். பாட்டி கெஞ்ச, அம்மா அதட்ட, தாத்தா கொஞ்ச, அப்பா அடிக்க வர, இத்தனை கலாட்டாவுக்கு இடையே நான் பிடிவாதம் பிடித்து ஒரு விதமாக எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வேன்.

ஒரு சனிக்கிழமை. 'எண்ணெய் தேய்த்துக்கொள்ள ஏன் யாரும் கூப்பிட வில்லை? பாட்டிக்கு ஒருகால் தள்ளாத வயதிலே அவளை நான் படுத்துவது பிடிக்க வில்லையோ! ஏன் அம்மாவும் என்னைக் கூப்பிட வில்லை? நான் எண்ணெய் தேய்த்துக்கொள்ளப் படாத பாடு படுத்துவது அவளுக்கும் பிடிக்க வில்லையோ?' என்றெல்லாம் தோன்றிற்று. ஏன் நாளுகவே எண்ணெய் தேய்த்துக்கொண்டு நல்ல பெயர் சம்பாதிக்கக் கூடாது என்று எண்ணினேன். ''அம்மா, அம்மா'' என்று கூப்பிட்டேன். அம்மாவைக் காணவில்லை. தாத்தா தோட்டத்தில் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டிருந்தார். வாசல் பக்கத்தில் பாட்டி காலை நீட்டிக் கொண்டு ஜபம் பண்ணிக்கொண்டிருந்தாள். மாடியில் சென்று பார்த்தேன். அப்பா தீவிரமாக ஏதோ புஸ்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். இதுதான் சரியான சமயம். சமர்த்து என்று பேர் வாங்கலாம் என்று நினைத்து ஒரு சிறிய பாத்திரத்தில் கொஞ்சம் எண்ணெயும் மற்ருெரு பாத்திரத்தில் கொஞ்சம் சீயக்காயும் எடுத்துக்கொண்டு குளிக்கும் அறைக்குச் சென்றேன். எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து வெளியே வந்தேன். நல்லவேளை! கூடத்தில் ஒருவரும் தென்படவில்லை.

வேஷ்டி, சொக்காய்களைப் போட்டுக்கொண்டு ஒரு மூலையில் புத்தகமும் கையுமாக உட்கார்ந்தேன்.

உள்ளே வந்த அம்மா, ''ஏண்டா சீமா, என்னடா சமத்தா உட்கார்ந்து படித்துக்கொண் டிருக்கிறாய்?'' என்று கேட்டாள். சமர்த்து என்றதும் எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது. ''ஆமாம் அம்மா. நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் இன்று முதற்கொண்டு சமத்துதான், அம்மா'' என்றேன்.

''ஏண்டா, இன்னிக்கு என்ன விசேஷம்?'' என்றாள் அம்மா.

''நான் எண்ணெய் தேய்ச்சுக்கப் படுத்தறேன்னுதானே, எல்லோரும் இன்னிக்கு என்மீது கோபித்துக் கொண்டு பேசாமல் இருந்தீர்கள்? என் தலையைத் தொட்டுப் பார். உனக்கு எல்லாம் புரிந்துவிடும்'' என்றேன்.

''ஸ்நானம் பண்ணினாயா?''

''உங்கள் அமர்க்களமே இல்லாமே நானே என் கைகளினாலேயே எண்ணெய் தேய்த்துக் கொண்டேன்'' என்று மார்தட்டிக் கொண்டு நின்றேன்.

''என்னடா சீமா இது. இன்னிக்கு அமாவாசை. இன்னிக்கு யாராவது எண்ணெய் தேய்ச்சுக்குவாளா?'' என்றாள் அம்மா சற்றுக் கோபத்துடன்.

அவசரப்பட்டு அசடாக நடந்து கொண்டு விட்டோமே என்று விழித்தேன். அந்தச் சமயத்தில் பாட்டி உள்ளே வந்தாள்.

''லக்ஷ்மி, ஏன் சீமா ஒரு மாதிரியா இருக்கான்? அவன் மூஞ்சியிலே எண்ணெய் வழியறாப்பலே இருக்கே'' என்றாள்.

''உங்க செல்லப் பேரன் ஒத்தருக்கும் சொல்லாமே அமாவாசை பாத்து எண்ணெய் தேய்த்துக் கொண்டு வந்திருக்கான்'' என்றாள் அம்மா.

''ஆமாம். நல்லெண்ணெய் பாத்திரத்தைத்தான் தேச்சுப் புதுசா வச்சிருக்கியே, சீமாவுக்குத் தேச்சுக்க எண்ணெய் ஏது?'' என்று கேட்டாள் என் பாட்டி.

''ஆமாம் ஆமாம். மறந்துவிட்டேன். எங்கிருந்தடா எண்ணெயை எடுத்துண்டே?'' என்றாள் அம்மா.

நான் சுட்டிக் காட்டிய அந்தப் பாத்திரத்தைப் பார்த்தவுடன் அம்மாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''அம்மா அம்மா, (இப்படித்தான் என் தாயார் என் பாட்டியைக் கூப்பிடுவது) இதோ பார்த்தேளோ, உங்க சமத்துப் பேரன் விளக்கு ஏற்றும் இலுப்பை எண்ணெயைத் தேய்ச்சுண் டிருக்கான்'' என்றாள். பாட்டி துள்ளிக் குதித்தாள். ''அட அசடே, உடம்பு என்னத்துக்கு ஆகும்!'' என்று கேட்டாள். என்னைப் பார்த்து அவள் ஏளனமாகச் சொன்னவுடன் என் முகத்தில் அப்பொழுது எண்ணெய்மாத்திரம் வழியவில்லை; அசடும்கூட வழிந்தது.

பாட்டி என்னை அருகில் கூப்பிட்டு, தலைமுதல் கால்வரை நன்றாகத் துடைத்த பொழுது என் தாத்தா அங்கே வந்தார். அவர் கேலிச் சிரிப்புடன், ''எட்டணா வேணுமாடா?'' என்றார்.

அப்பாவுக்கும் தெரிந்துவிடப் போகிறதே என்று பயந்து அவ்விடத்தைவிட்டு ஓடினேன்.

''ஏன்னா, சீமா எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்போதெல்லாம் எட்டணா கொடுக்கிறேளே. அவன் ஏதாவது கண்டதை வாங்கித் தின்று உடம்புக்கு வந்துட்டால் என்ன பண்ணுவது?'' என்று தாத்தாவிடம் கேட்டாள் பாட்டி.

தாத்தா சிரித்துக்கொண்டே, ''அந்த விஷயம் உனக்குத் தெரியாதா? அவனை அந்தப் பணத்தைச் செலவழிக்காமல் சேர்த்து வைக்கச் சொல்லி இருக்கேன். மாசக் கடைசியில் சீமாவைக் கூப்பிட்டு, 'அந்தப் பணத்தை அம்மாவிடம் கொடுத்து வீட்டுக்கு எண்ணெய் வாங்கும்போது உனக்கும் எண்ணெய் வாங்கச் சொல்லு' என்பேன். கொடுத்துவிடுவான் குழந்தை. அவன் என்னத்தை கண்டான்?'' என்றார்.

இந்த விஷயம் எனக்கு விளங்கப் பல வருஷங்கள் ஆயின. அந்த நாள் பெரியோர்களெல்லாம் என்ன சாமர்த்தியம் படைத்தவர்கள்!

(தொடரும்)



# நல்ல பொம்மை

"செம்மல்"

பொம்மை நல்ல பொம்மை!—கிழப்
பொக்கைச் சிரிப்புப் பொம்மை!
அம்மை தந்த பொம்மை!—பாரத
அம்மை தந்த பொம்மை!

நம்மை எல்லாம் மீட்டு—இந்த
நாட்டின் அடிமை ஓட்டி,
செம்மை செய்த பொம்மை!—புவிக்கே
தெய்வம் போன்ற பொம்மை!

கண்ணன் தந்த கீதை—புத்தர்
அண்ணல் தந்த போதம்,
கண்ணைப் போன்ற குணங்கள்—மனிதர்
கருவாய்ப் பிறந்த பொம்மை!

ஏசு சொன்ன மொழிகள்—அன்பு
ஏந்தல் நபியின் வழிகள்
மாசு போக ஓதி—உண்மை
வணங்கி நின்ற பொம்மை!

சாதித் தீட்டு ஒழிய—எங்கும்
சமரசப் பாட்டு பொழிய
காதித் தொழில்கள் ஓங்க—நெறிகள்
காட்டிப் போன பொம்மை

வெள்ளைக் கழுகை விரட்ட—அகிம்சை
வில்லை எடுத்த பொம்மை
தள்ளிப் போக நினைத்தவர்—பங்கைத்
தந்து வாழ்த்திய பொம்மை!

நீசக் குண்டுகள் பாய்ந்து—ஆவி
நீத்து உடம்பு மாய்ந்தும்
தேசம் மேவும் மக்கள்—இதய
தீப மான பொம்மை!

பொம்மை நல்ல பொம்மை!—காந்தி
பூத்த முகத்துப் பொம்மை!
பொம்மை நல்ல பொம்மை!—அறத்தின்
பூர்வ புண்ணியப் பொம்மை!

# காதொலிக் கருவி


ஈ. ஜி. என்.


ராஜனுடைய வீட்டிற்கு அடுத்த வீடு ராமுவின் வீடு. ஒருவரை ஒருவர் கூப்பிட ஜன்னலின் வழியாக இரைந்து கத்துவார்கள். இதைத் தவிர்க்க ராஜனுக்கு ஒரு யோசனை தோன்றியது. இருவர் வீட்டிற்கும் ஒரு டெலிபோன் வைத்துக்கொண்டால் ஒருவரை ஒருவர் கூப்பிடவும் அரட்டை அடிக்கவும் சௌகரியமாக இருக்குமென்று தோன்றவே அவன் டெலிபோன் கருவி அமைக்க முயன்றான். அதற்கு அவன் தன் மாமாவின் தயவை நாடவேண்டி யிருந்தது. அவரிடம் செல்ல ராஜனும் ராமுவும் புறப்பட்டனர். அங்கே அவர்கள் சென்றபொழுது ராஜனின் மாமா ஒரு விஞ்ஞானப் பத்திரிகையைப் படித்துக்கொண் டிருந்தார்.


''வாருங்கள், குட்டி விஞ்ஞானிகளே! இப்பொழுது ஏதாவது அணுக்குண்டு தயார் செய்யக் கிளம்பினீர்களா, என்ன?'' என்றார்.

அதற்குள் ராஜன் இடைமறித்து, ''அணுக்குண்டு கிடக்கட்டும். முதலில் ஒரு டெலிபோன் கருவி செய்ய வழி சொல்லுங்கள்'' என்றான்.

''அடேயப்பா! பெரிய போடு போட்டாயே. டெலிபோன் செய்வது, அதுவும் உங்களால் செய்யக் கூடியபடி சொல்வது அவ்வளவு சுலபமில்லை. இருந்தாலும் அதனுடைய ஒவ்வொரு பாகங்களாகச் செய்து பார்க்க முயற்சி செய்யலாம். 'காதொலிக் கருவி'யைப் பற்றிப் பல முறை சொல்லியிருக்கிறேன். இதை முதலில் செய்யலாம். ஒரு டெலிபோன் அமைக்க இரண்டு காதொலிக் கருவிகள் தேவை. நீ ஒன்று செய். ராமு ஒன்று செய்யட்டும். இதைச் செய்யும் முறைகளைக் காண்பிக்கிறேன்'' என்று சொல்லித் தம் மேஜைக்குள்ளிருந்து 'காதொலிக் கருவி' என்ற கட்டுரையை எடுத்து அதிலிருந்த படங்களைக் காட்டி விளக்க ஆரம்பித்தார்.







அடுத்த படம் முடிவில் ஓர் அட்டைத் துண்டு. இந்த அட்டைத் துண்டில் துவாரங்கள் இரண்டு இருப்பதைக் கவனியுங்கள். இவற்றுள் காந்தத்தைச் செருகி, படம் 3-இல் காட்டியபடி வார்னிஷ் கம்பியைச் சுற்றவேண்டும். கம்பி சுமார் 35 S. W. G. அல்லது 38 S.W.G. அளவுள்ளதாக இருக்கலாம். கம்பி மிக மெல்லியதாக இருக்கும். ஆகவே ஜாக்கிரதையாகச் சுற்றவேண்டும். சுற்றவேண்டிய திசையைப் படத்திலுள்ள அம்புக் குறிகள் காண்பிக்கின்றன. காந்தக் கட்டையின் ஒரு முனையில் படத்தில் காட்டியபடி சுற்றி முடித்தவுடன் அடுத்த முனையிலும் அதே கம்பியைத் தொடர்ச்சியாகச் சுற்றி வரவேண்டும். அதைப் படம் 4-இல் காணலாம்.


இந்த வேலை முடிந்ததும் முதலில் செய்தது போன்ற மற்றொரு துண்டு தயார் செய்து படம் 5-இல் காட்டியபடி கம்பிச் சுருளின்மேல் பொருத்திவிட வேண்டும். அதற்கு அடுத்த படத்தில் (படம் 6) A என்று குறிப்பிட்டிருப்பது சற்றுக் கனமான அட்டையினால் வெட்டப்பட்ட வட்டம். இதன் நடுவில் காந்தத்தின் வளைவுப் பாகம் நுழையும்படி துவாரம் செய்து, காந்தத்தை அதில் செருகிவிட வேண்டும். கம்பிச் சுருளின் கீழ்ப் பாகத்திலுள்ள அட்டையை வட்டமான அட்டையுடன் சேர்த்துத் தைத்துவிடலாம், அல்லது ஒட்டிவிடலாம். இந்த மாதிரி செய்து முடித்த பாகத்தைப் படம் 7 காட்டுகிறது.


அடுத்த படத்திலுள்ளது (படம் 8) ஓர் அட்டைக் குழாயினால் முன் செய்த பாகங்கள் பொருத்தப்படுவதைக் காட்டுகிறது. முன் செய்த பாகத்திலுள்ள வட்டமான அட்டையின் மேல் கெட்டியாகப் பொருந்தும்படி இதைச் செய்யவேண்டும். இதன் உயரம் காந்தக் கட்டையின் முனைகளைவிட 1'' தான் அதிகம் இருக்கவேண்டும். இந்தக் குழாயைக் காந்தக் கட்டையின் அடியிலுள்ள அட்டையுடன் சேர்த்து, ஓரங்களைத் தைத்துப் பிறகு ஒட்டிவிடலாம். இந்தப் படத்தில் D


5



6


7




8


படம் 1. இது உங்களுக்கு நன்றாகத் தெரிந்த பொருள். அதாவது நிலைக் காந்தம். இந்த வகைக் காந்தங்கள் சிறிய அளவுள்ளவைகளாக விற்கப்படுகின்றன.

என்று காண்பிக்கப்பட்டிருப்பது ஓர் மெல்லிய தகரம். இது அட்டைக் குழலின்மேல் சரியாகப் படியும்படி செய்யப்பட வேண்டும். குழலுக்குள் போகக்கூடாது. குழலைவிடப் பெரிதாகவும் இருக்கக் கூடாது. இதைக் குழலின்மேல் வைத்தால் காந்த சக்தியினுல் அது விழாமல் நிற்கும். இப்பொழுது அடுத்த படத்தைக் கவனியுங்கள். (படம் 9). இதுவும் மெல்லிய அட்டையினுல்செய்யப்படவேண்டியது. இது முன் செய்த குழலைவிட, கொஞ்சம் பெரியது. உயரம், முன் செய்ததைவிட ½" அதிகமாகவும் முன் செய்த குழலின்மேல் கெட்டியாகப் பொருந்தும்படியாகவும் செய்ய வேண்டும். இதன் மூடியில் படத்திலுள்ளபடி 4 துவாரங்கள் போட்டு விடவேண்டும். படம் 10-இல் உள்ளது ஓர் அட்டைக் குழல். இதன் அளவு முதலில் செய்த அட்டைக் குழலில் பாதி இருக்கலாம். உயரம் சுமார் 2½" இருக்கலாம். இதைப் படத்தில் காட்டியபடி செய்து, இரண்டு திருகு ஆணிகளை அதன் அடியில் பொருத்த வேண்டும். இதைப் பொருத்தும் பொழுது இரண்டு வார்னிஷ் கம்பிகளோடு திருகுகளைச் சேர்த்துப் பொருத்தி விட்டு, முன் செய்த கம்பிச் சுருளின் இரண்டு முனைகளை, திருகுகளிலுள்ள கம்பிகளோடு பிணைத்து விடவேண்டும். இப்பொழுது படம் 11இல் காட்டியபடி முதல்அட்டைக் குழலுடன் இதை ஒட்டிவிடலாம். இரண்டாவது செய்த அட்டை மூடியையும் படத்தில் காட்டியபடி பொருத்திவிட்டு, திருகு ஆணிகளின் முனைகளை ஒரு பாட்டரி (Drycell) யுடன் பொருத்தித் தேய்த்தால் கர கர என்ற சப்தம் நன்ருகக் கேட்கும். அட்டைக் குழல்களின் மேல் கறுப்புப் பெயிண்ட் பூசிவிட்டால் படம் 12-இல் காட்டியபடி இருக்கும்.


"இதைச் செய்யப்பொறுமையும் சுத்தமான வேலைப்பாடும் வேண்டும். இல்லாவிட்டால் இது சரிவர வேலை செய்யாது" என்று சொல்லி முடித்தார். உடனே ராமு, "நாங்கள் இதை இன்னும் ஒரு வாரத்தில் செய்து உங்களிடம் காண்பிக்கிருேம், பாருங்களேன்" என்ருன்.

"நீங்கள் இதை முடித்தவுடன் பேசும் கருவியைச் செய்யும் வழி சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு மாமா அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.




10



11



12

# ரெயிலில் . . .

**கி. சா. ராஜன்**

என் விடுமுறையைக் கழிக்கப் பம்பாயிலிருந்து சென்னைக்கு 'எக்ஸ்பிரஸி'ல் வந்துகொண்டிருந்தேன். என் தந்தை ஓர் இளைஞரை என்னைக் கவனித்துக் கொள்ளுமாறு கூறியிருந்தார்.

அந்த இளைஞரை எனக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. இரண்டு வாரம் முன்பு என் பூணூலுக்குக் கிடைத்த 'ரிஸ்ட் வாட்ச்'சைக்கூட அவரிடம் இருந்தால் பத்திரமாக இருக்கும் என்று கொடுத்தேன்.

அடுத்த நாள் மத்தியான்னம் வரையில் அவர்தான் தம் கையில் என் கைக்கடிகாரத்தைக் கட்டிக் கொண்டு இருந்தார். கடப்பை நெருங்கியதும் அவரிடம் மெள்ள 'வாட்ச்'சைக் கேட்டேன் அவர் என்னை முறைத்துப் பார்த்தார்.

"ஏதுடா உன்னோட வாட்சு? சின்னப்பையனு இருந்துண்டு இவ்வளவு பேசறயே. என்னோட வாட்சைக் கேட்க உனக்கென்னடா அவ்வளவு தைரியம்?" என்று ஒரு போடு போட்டார்!

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. "திருடன், திருடன்! என் வாட்சை எடுத்துக்கிட்டான்" என்று கத்தினேன்.

பிரயாணிகள் எல்லாருடைய தீர்ப்பும் எனக்கெதிராகவே இருந்தது. "சின்னப் பையன்கிட்டே எங்கேடா வாட்சு இருக்கப்?" என்று ஒருமுகமாகக் கூறினார்கள். எனக்கு அழுகை வரும்போலிருந்தது. புதிய நூற்றைம்பது ரூபாய் வாட்சு கண் முன் பறிபோகிறது என்றால்?

கடப்பையில் போலீசை வரவழைத்தேன். இன்ஸ்பெக்டர் தீர விசாரித்தார். வாட்சைக் கையில் வாங்கிக்கொண்டு இருவரையும் ஓர் அறைக்குக் கூட்டிச் சென்றார்.

"தம்பி, வாட்சு பெயர் என்ன?"

எனக்கென்ன தெரியும்? அத்தனை உன்னிப்பாக நான் கவனித்தேனா? ஏதோ தெரிந்ததைக் கூறினேன். "வெஸ்ட் என்ட் கம்பெனி பண்ணியது. கடிகாரத்தின் பெயர் தெரியாது."

மற்றவர் மடமடவென்று "ஓர்க்வெல் என்று பெயர், சார். பதினைந்து ஜுவல் உடையது. அதன் பட்டியல் எண் 1723. சுவிட்ஜர்லாந்தில் தயாரிக்கப்பட்டது, சார்" என்று பதிலளித்தார்.

பக்காத் திருடன் எல்லாவற்றையும் முன்னேற்பாடாகப் பார்த்து வைத்துக்கொண்டிருக்கிறான் என்று எனக்குத் தோன்றியது. எனக்கு எப்பொழுதுமே கவனிப்புச் சக்தி குறைவு. இதைப்பற்றி இப்பொழுது நானே வருந்தினேன். இன்னும் வாட்சு ஸ்டிராப்பின் நம்பர் எல்லாவற்றையும் சொன்னான் அவன்.

மறு பேச்சில்லாமல் இன்ஸ்பெக்டர் அவனிடம் வாட்சைக் கொடுத்தார். என்னை இனிமேலாவது நல்லபிள்ளையாக இருக்கவேண்டும் என்று உபதேசம் செய்தனுப்பினார். வண்டியும் கடப்பையை விட்டுக் கிளம்பியது. நான் அழுது விட்டேன்.

சென்டிரலில் ஒருவரும் என்னை அழைத்துப்போக வரவில்லை. நானேதான், "வரவேண்டியது அவசியமில்லை" என்று எழுதியிருந்தேன். இருந்தாலும் ஒரு சபலம்! என் மாமா வந்திருந்தால் அவரிடம் சொல்லி வாட்சைத் திருப்பி வாங்கலாமா என்று.

போர்ட்டரைக் கூப்பிட்டுப் பெட்டி படுக்கைகளைக் கொடுத்தேன். "ராஜன்" என்று யாரோ கூப்பிட்டார்கள். திரும்பினேன். அந்தக் கௌரவத் திருடர்தான்!

"இந்தா, உன்னுடைய கடிகாரம். விலையுயர்ந்த பொருள்களை முன்பின் தெரியாதவர்களிடம் ஒருபோதும் கொடுக்காதே. பார், என்னுடையதுதான் இது என்று போலீசிடம் நிரூபித்துவிட்டேன்! உனக்குப் பாடம் கற்பிக்கத்தான் இம்மாதிரி செய்தேன். வேறொன்றுமில்லை" என்றார். அவரிடம என் நன்றியைத் தெரிவித்துவிட்டுச் சென்றேன்.



# தலைவித்தை

ப.ரா

ஊர் மைதானத்திலிருந்து அந்தக் கழைக்கூத்தாடியின் டமாரம் ஒலிக்கத் தொடங்கிற்று. 'டம் டம் டம் டம்' என்று காது செவிடுபட எழுந்த அந்த ஓசையால் கவரப்பட்டவர்களாகச் சிறியவர்கள், பெரியவர்கள் எல்லோரும் மைதானத்தை நோக்கி விரைந்தனர்.

தம்பட்டத்தின் சப்தம்தான் பலமென்றால், அங்கே காண்பிக்கப்பட்ட வித்தைகளும் சாதாரணமானவையல்ல. கழைக்கூத்தாடியின் மூன்று வயதுப் பெண் குழந்தை தன் சின்னஞ் சிறு உடலை வில்லாக வளைத்துச் செய்த வேலைகள் அபாரமாயிருந்தன. பார்த்தவர்கள் எல்லோரும் மூக்கின் மேல் விரல் வைத்தனர். 'மீன்குட்டிக்கு நீச்சல் கற்றுக்கொடுக்க வேண்டுமா?' என்ற வாக்கின் பொருள் அப்போதுதான் பலருக்குப் புரிந்தது.

வீரண்ணன் என்பது அந்தக் கழைக்கூத்தாடியின் பெயர். அந்தக் குடும்பத்துக்குத் தலைவன் என்பது தோடல்லாமல் குருவும் அவனே. வம்சபரம்பரையாக வரும் வித்தைகளில் தன் குழந்தைகளுக்குத் தக்க பயிற்சியளித்துவிட்ட பின் மெல்ல மெல்லத் தான் ஒதுங்கி ஒய்வெடுத்துக்கொண்டிருந்தான். இப்போது அவன் செய்துகொண்டிருந்த வித்தைகளை விளக்கும் குட்டிப் பிரசங்கங்கள். இடையிடையே தம் பட்டத்தைப் பலங்கொண்ட மட்டும் அடித்து விளம்பரமும் செய்தான். கும்பல் அதிகரித்தால்தானே அவனுக்கு வரும்படியும் சேரும்?

அன்றைய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பெரிதும் சிறப்பூட்டியவை வீரண்ணனின் மகன் செய்த வித்தைகள். பன்னிரண்டு வயது நிரம்பாத பையன் அவன். எனினும் பயிற்சியும் கட்டுப்பாடும் தக்க பலனளித்திருப்பது பிரத்தியட்சமாகத் தெரிந்தது. இடையில் ஒரு பழைய, சாயம் போன லங்கோடு அணிந்து நின்றான் பையன். அடடா! எத்தகைய உடற்கட்டு அது! வெண்கலச் சிலை போல் அழகும் உறுதியும் கொண்டு அமைந்திருந்தது. அதன் ஒவ்வொரு தசையும் எலும்பும் அவன் சொன்னபடி கேட்டன. அச்சமென்பது சிறிதுமின்றி மயிர்க்கூச்செறியும்படியான அபாய வித்தைகள் பலவற்றை அநாயாசமாகச் செய்தான். தலையில் ஒரு டஜன் மண்பானைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்துக்கொண்டு அறுபதடி உயரமுள்ள கம்பத்தின் உச்சிக்கு ஏறி அங்கிருந்து இறங்கி வந்தான். கம்பியின் மீது நடக்கும் வித்தை ஸர்க்கஸில் சாதாரணமாகக் காண்பிக்கப்படுவது. ஆனால் இந்தச் சிறுவன் கம்பியின் மேல் தலைகீழாக நடந்து காட்டியதுதான் விந்தையாயிற்று. இந்த மாதிரியான வேலையை எப்போதும் எங்கும் பார்த்ததில்லையென ஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

அதிகம் சொல்வானேன்? பார்த்தவர்களின் மகிழ்ச்சிக்கும்

பாராட்டுக்கும் ஓர் அளவுகோல் வசூலாகும் தொகைதானே? கழைக்கூத்தாடி தரையில் விரித்திருந்த துணியில் நாணயங்கள் நிறைந்த காட்சி தந்தது. தம்மிடமிருந்த சில்லறையை ஒதுக்காது, ஒளிக்காது அப்படியே எடுத்து வீசிய ஊர்ச் சிறுவர்களின் தாராள சிந்தையை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். தம்மையொத்த ஒரு சிறுவனின் உடல் வனப்பும், உறுதியும், அவன் காட்டிய சாகஸமும் அவர்களது மனத்தை அடியோடு கவர்ந்து விட்டன.

வித்தைகள் முறையே முடிந்து கம்பங்கள் பிடுங்கப்படும் கட்டம் வந்தது. இன்னும் பல பையன்கள் நகர மனமின்றி அங்கேயே நின்று கொண்டிருந்தனர். கழைக்கூத்தாடிப் பையன் தன் உடலழகை ஒரு கந்தைச் சட்டையால் மூடிக்கொண்டு தகப்பனுக்கு ஒத்தாசை புரிந்தவாறு இருந்தான். அவனிடம் பேச வேண்டும், சிநேகம் செய்து கொள்ளவேண்டும் என்று பல இதயங்கள் துடிப்பது அந்தச் சிறுவனுக்குத் தெரிந்ததோ, என்னவோ!

ஆனால் அந்த மௌன நிலைமை வெகு நேரம் நீடிக்கவில்லை. கம்பங்கள், கயிறுகள் எல்லாம் எடுக்கப்பட்ட பின் வீரண்ணன் இரவுச் சமையலுக்குச் சாமான்கள் வாங்கி வரக் கடைத் தெருவுக்குப் புறப்பட்டான். வயதில் பெரிய அவன் போனவுடன் பையன்களது கூச்சம் சிறிது விலகியது. பள்ளிச் சிறுவர்களுக்குத் தலைவன் போன்றிருந்த சுந்தரம் மெல்லப் பேச்சுக் கொடுத்தான்.

''உன் பெயர் என்ன, தம்பீ?''

''முத்தையன்'' என்று கழைக்கூத்தாடியின் மகன் புன்சிரிப்புடன் பதிலளித்தான். பால் வடியும் அவன் முகத்தில் புன்னகைச் சுடர் ஒன்று வீசியது. ஒழுங்கான, அழகிய பல்வரிசை ஒரு கணம் புலனாகி மறைந்தது.

நிலையான வாசஸ்தலமோ, வேளைக்குப் போதிய உணவோ இல்லாத நாடோடி வாழ்க்கையாயினும், அழகும் ஆரோக்கியமும் முத்தையனை உறைவிடமாகக் கொண்டிருந்தன. அத்துடன் அவன் நடத்தையில் ஒரு பணிவு, அடக்கம். அவனுடைய புன்னகையில் ஓர் இனிமை.

இதற்குள் சிறுவர்கள் எல்லோரும் அவனைச் சுற்றி வளைந்து கொண்டு விட்டனர். பலர் பல விதமான தின்பண்டங்களை அவனிடம் நீட்டினர். முத்தையன் நன்றியுணர்ச்சியுடன் அவற்றை வாங்கி முதலில் தன் தம்பி தங்கைகளிடையே பகிர்ந்தளித்தான்.

''நீ படித்திருக்கிறாயா?'' என்று வினவினான் ஒருவன்.

''இல்லை சாமி. என் தொழிலுக்குப் படிப்பு எதற்கு?'' என்று பதில் வந்தது.

''இவ்வளவு அற்புதமான வித்தைகள் செய்கிறாயே, நீ ஸர்க்கஸில் சேர்ந்தால் நல்ல சம்பளம் தருவார்களே!'' என்று இன்னொருவன் யோசனை கூறினான்.

''சாமி, இது எங்கள் குல வித்தை. இது கையில் இருக்கும் வரை சுதந்தரமாகச் சந்தோஷமாக இருப்போம். வேற்று மனிதர்களிடம் கைகட்டிச் சேவகம் செய்ய வேண்டிய தேவை என்ன?''-அவன் பதிலில் அறிவும் தன்மதிப்பும் புலனாயின.

அந்தி மங்கிக்கொண்டே வந்தது. சிறுவர்களுக்கு முத்தையனைப் பிரிய மனமில்லை. ஆளுக்கொரு கேள்வியாகக் கேட்டு அவனைத் துளைத்தெடுத்துக்கொண்டிருந்தார்கள். அவன்தான் முதலில் எழுந்து விடை பெற வேண்டியதாயிற்று.

''நாயனா வந்தால் கோபிப்பார். நாங்கள் இருட்டு முன் சத்திரத்துக்குப் போய்ச் சேரவேண்டும்'' என்று கிளம்பினான் அவன். ஊருக்கு வெளியேயிருந்த பாழடைந்த சத்திரத்தில் அன்றிரவைக் கழித்துவிட்டு அதிகாலையில் அந்தக் குடும்பம் எழுந்து வேற்றூருக்குப் புறப்பட வேண்டும் என்று ஏற்பாடு. மூட்டை முடிச்சுக்கள், கம்பங்கள், கயிறுகள் ஆகிய அவர்களது உடமைகளெல்லாம் குழந்தைகளின் தலைமீது ஏறின. அவற்றைச் சுமப்பதற்கு உதவ முன்

வந்தனர் பல சிறுவர்கள். நயமாக அந்த உதவியை மறுத்து விட்டு முத்தையன் முன்னே நடக்க அவன் தம்பி தங்கையர் பின் தொடர்ந்தனர்.

எங்கிருந்தோ வந்த அந்த ஏழைக் கழைக்கூத்தாடிச் சிறுவ னின் தோற்றமும் நடத்தையும் சொற்பப் பரிசயத்துக்குள் ஊர்ச் சிறுவர்களின் மனத்தில் அழிக்க முடியாத விதமாகப் பதிந்துவிட் டன. இளமையிலும் ஓர் முதிர்ச்சி; ஏழைமையிலும் ஒரு கம்பீரம்!

கூடை வீதிக்குப் போயிருந்த வீரண்ணன் சாமான்களுடன் வந்து சேர்ந்தான். சமையல் தொடங் கிற்று. அன்று வரும்படி சற்று அதிகமானபடியால் சாப்பா டும் அதற்கேற்ப, வலுதான். எல் லோரும் சாப்பிட்டு முடியும் போது இரவு மணி ஒன்பதாகிவிட்டது. களைப்பு மேலீட்டால், படுக்கை விரிக்குமுன்பே குழந்தைகள் ஒன் றின் மீதொன்று உருண்டு கொண் டிருந்தன.

ஆனல் வீரண்ணனுக்கு மட்டும் படுக்க அவகாசமில்லை. அவன் இரவுக்கிரவே அடுத்த ஊர் சேர்ந்து மறுநாள் அங்கே வித்தைகள் காண்பிப்பதற்கான முன்னேற்பாடு கள் செய்ய வேண்டியிருந்தது. அவ சரமாகச் சாப்பிட்டு முடித்தவன் குழந்தைகளின் பொறுப்பை முத்தையன் வசம் விட்டுவிட்டுக் கையில் ஒரு தீவட்டியுடன் புறப் பட்டான். அந்தப் பாழும் சத்திரத் துத் திண்ணையில், பயங்கரமான இரவு வேளையில் பன்னிரண்டு வயதுப் பையன் குழந்தைகளுக்குத் துணையாக உட்கார்ந்திருந்தான்.

முத்தையனுக்கு இம்மாதிரியான அநுபவம் புதிதல்ல. அவன் பயப் படவில்லை. இரண்டு வருஷங்க ளுக்கு முன் அவன் தாய் கால மானது முதல், குடும்பத்துக்கு மூத்த பையன் என்ற முறையில் அவனது பொறுப்புகள் பெருத் திருந்தன. தகப்பனுக்கு வலது கை போல் அமைந்து உதவினன். குழந்தைகள் பற்றிய கவலையே தகப்பனுக்கு இல்லாதவாறு செய் தான் முத்தையன்.

இரவு மெல்ல முன்னேறிக் கொண்டே போயிற்று. சற்று நேரம் மங்கலாகப் பிரகாசித்த ஐந் தாம் பிறைச் சந்திரன் மறைந்த பின் கருங்கும் என்ற இருள் கவிந்து நாற்புறமும் மூடிக்கொண்டது. தூரத்தில் ஊர் விளக்குகள் ஒன்றி ரண்டு தெரிந்தன. ஊருக்கும் சத் திரத்துக்குமிடையே அரை மைல் தொலைவிருக்கலாம்.

சின்னஞ்சிறு குப்பி விளக்கு புகை மண்டி எரிந்துகொண்டிருக்க, அத னொளியில் முத்தையன் முழங்கா லைக் கட்டிக்கொண்டு உட்கார்ந் திருந்தான். அரைத் தூக்கத்தி லிருந்த அவனைத் தூக்கிவாரிப் போட்டது, ''டேய் பையா!'' என்ற ஓர் அதட்டல் சப்தம். கண் விழித்து நோக்கியவன் மலை போன்ற ஆகிருதியுடன் எதிரே நின்ற ஒரு மனித உருவத்தைக் கண்டான். அதற்கு முகமூடி வேறு. முத்தையன் முதலில் நடுங்கிப் போனுன். இத்தனை பிரம்மாண்டமான ஆகிருதியையும் அதற்குப் பொருத்தமான பயங்கர முகத்தோற்றத்தையும் அவன் இது வரை கண்டதேயில்லை.

''எழுந்திருடா, பயலே'' என்று அவனைக் காலால் உசுப்பினுன் அந்த அசுரன். பையன் அச்சத்துடன் எழுந்து நின்முன். அதற்குள்ளா கவே அவனுடல் குப்பென வியர்த்துவிட்டது.

''நீதானேடா இன்று சாயங் காலம் மைதானத்தில் வித்தைகள் செய்தவன்?'' என்று இடியை யொத்த குரலில் கேள்வி பிறந் தது. முத்தையன் பேச நாவெழாத படியால் தலையை அசைத்தான்.

''சபாஷ்! நல்ல வேலைகளெல் லாம் செய்து காண்பித்தாய். நான் தூரத்திலிருந்து கவனித்துக்கொண் டிருந்தேன்....'' பையன் முதுகில் அவன் தட்டிக்கொடுத்தபோதே தன் எலும்புகள் நொறுங்குவது போன்ற உணர்ச்சி முத்தையனுக்கு ஏற்பட்டது. 'இந்த மனித மிருகம் தன் பாராட்டுதலைத் தெரிவிப்பத காகத்தானு இப்படி நடு ராத்தி யில் இங்கே வந்து சேர்ந்திரு

கிறது?' என்று அதிசயித்தான் அவன்.

''சரி, அது கிடக்கட்டும். நான் இப்போது இங்கே எதற்காக வந்திருக்கிறேன், தெரியுமா?'' என்று அந்த முரடனே கேட்டான்.

''தெரியாது, ஐயா'' என்று ஈன ஸ்வரத்தில் பதிலளித்தான் முத்தையன்.

''உன்னை என்னோடு அழைத்துப் போக வந்திருக்கிறேன். புறப்படு சீக்கிரம்.''

''எங்கே? எதற்கு?'' என்று பையன் பதறினான்.

''அதெல்லாம் கேட்காதே. உன்னால் எனக்கு வேலை ஆகவேண்டியிருக்கிறது. நீ செய்யும் உதவிக்குத் தகுந்தபடி அவ்வப்போது வெகுமதி தருகிறேன். பயப்படாமல் வா.''

முத்தையனுக்குச் சிறிது துணிவு வந்தது. ''உன் வெகுமதிகள் ஒன்றும் எனக்குத் தேவையில்லை. நீ யாரென்றே தெரியாதபோது நான் உன்னை நம்பி எப்படி வர முடியும்?'' என்று அவன் கேட்டான்.

மலைமனிதன் அவனைக் கோபமும் ஏளனமும் கலந்த பார்வையில் பார்த்தான். மறுகணம் சத்திரம் அதிரும்படியாக இடி இடியென்று நகைத்தான். உறக்கத்தில் ஆழ்ந்திருந்த குழந்தைகள் இரண்டொன்று கண் விழித்துப் படுக்கையில் புரண்டன.

''பையா! நான் யாரென்று தெரிய வேண்டுமா உனக்கு? உம்.. சொல்கிறேன். பக்காத் திருடன் பக்கிரிசாமி என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? நான்தான் அது.''

முத்தையன் திடுக்கிட்டான். பல கொலைகள், கொள்ளைகளில் சம்பந்தப்பட்ட பக்கிரிசாமியின் பெயர் அந்தப் பக்கங்களில் பிரசித்தம்.

''என்ன....? பக்கிரிசாமி இப்போது ஜெயிலில் அல்லவா இருப்பதாகக் கேள்வி. நீங்க எப்படி?..''

மீண்டுமொரு முறை அந்த இடிச் சிரிப்பு; அத்துடன் குப்பென்ற சாராய வாசனை வீசிப் பையன் மூச்சைத் திணறவடித்தது. ''ஆமாமடா பயலே, ஆமாம். பக்கிரி ஜெயிலுக்குப் போனான், முந்தா



நாள் வரையில் ஜெயிலில்தான் இருந்தான். இப்போது காவற்காரன் கழுத்தை நெரித்து, ஜெயில் கதவை உடைத்துத் தப்பி வெளியே வந்து உன் கண்முன் நிற்கிறான். மறுபடியும் தன் தொழிலைத் தொடருவதில் நீ அவனுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். உன் வித்தைகளும் பயிற்சியும் இதில் மிகவும் பயன்படக் கூடியவையென்று கருதித்தான் உன்னிடம் வந்திருக்கிறான். தெரிந்ததா?''

ஒரு நிமிஷ காலம் ஸ்தம்பித்து

நின்றுவிட்ட முத்தையன் சமாளித்துக்கொண்டு, ''என்ன? இந்தத் திருட்டு வேலைக்கா என்னை இழுக்கிறாய்? முடியாது. முடியவே முடியாது'' என்று கத்தினான்.

''டேய், வாயை மூடு. மரியாதையாக நான் சொல்கிறபடி செய். இல்லாவிட்டால் கோழிக் குஞ்சைக் கொல்வது போல் உன் மென்னியைத் திருகி விடுவேன்.. உம், நட முன்னால்.''

முத்தையன் திமிறிக்கொள்ள முயன்றான்; பயன்படவில்லை.




பஞ்சு காற்றை எதிர்த்து நிற்க முடியுமா? அந்த முரடன் அவனை அப்படியே அலக்காக முன்னால் தள்ளிக்கொண்டு போய்விட்டான். போகிற போக்கில் முத்தையனின் பார்வை தன் தம்பிதங்கையரின் மீது விழுந்தது. பாவம்! ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அந்தக் குழந்தைகளுக்கு நடந்தது எப்படித் தெரியப் போகிறது? அவன் தான் உயிருடன் வந்து மீண்டும் அவர்களைக் காணப் போகிறானா?

வானளாவி நின்றது அந்த மூன்றடுக்கு மாளிகை. இது யாரோ ஒரு பெரும் செல்வச்சீமானது வீடாக இருக்க வேண்டுமென்று பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது. அதன் வெளி மதிற் சுவரில் ஏறி உள்ளே தோட்டத்தில் குதித்து அந்த மலைமனிதனும் முத்தையனும் கட்டடத்தை நெருங்கினர். எங்கும் ஒரே இருள். நிச்சப்தம். பங்களாவே நித்திரை மயக்கத்தில் இருந்ததாகத் தோன்றியது.

மேலே மூன்றாவது மாடியில் ஒரே ஒரு ஜன்னல் திறந்திருந்தது. அதைப் பார்த்ததும் மலை மனிதன் முகம் மலர்ந்தது. ''டேய் பயலே, இனிமேல்தான் உனக்கு வேலை இருக்கிறது'' என்றான் முத்தையனிடம்.

மொட்டை மாடியிலிருந்து மழைத் தண்ணீர் தரைக்கு வந்து சேருவதற்கான பெரிய இரும்புக் குழாய் திறந்திருந்த அந்த ஜன்னலின் பக்கமாகச் சென்றது. அதைக் காண்பித்துத் திருடன் சொன்னான்: ''டேய், நீ வித்தைக்காரப் பையன்; நான் பக்காத் திருடன். நாமிருவரும் சேர்ந்து வேலை செய்தால் எதுவும் பிரமாதமல்ல. நெருப்பும் விறகும் சேர்ந்த மாதிரிதான். இது பெரிய பணக்காரன் வீடு: இங்கே கை வைத்தால் நிறையப் பணம் கிடைக்கும். அதில் உனக்கு நல்ல பங்கு தருகிறேன். அத்தனை காசை நீ உன் வாழ்க்கையில் கண்ணால்கூடப் பார்த்திருக்க மாட்டாய். இத்தனைக்கும் உன்

வேலை மிகச் சுலபம். இந்த இரும்புக் குழாயைப் பிடித்து மேலே ஏறிப் போ. அந்த ஜன்னல் வழியாக உள்ளே குதி. எப்படியாவது ஓசை செய்யாமல் வழி கண்டு மாடிப் படிகளில் இறங்கி வந்து கொல்லைக் கதவைத் திறந்து வை. அதற்கு மேல் என் வேலை.... உள்ளே போன பிறகு வேண்டுமென்று வீட்டுக்காரர்களை எழுப்பி என்னைக் காட்டிக் கொடுக்க முயன்றாயோ, உனக்குத்தான் ஆபத்து. கொஞ்சம் சந்தேகப்படும்படியாக இருந்தாலும் நான் மெல்ல இங்கிருந்து கம்பி நீட்டி விடுவேன். நீ என்னுடன் வந்ததாகச் சொல்லும் கதையை யாரும் நம்ப மாட்டார்கள். நீ திருட முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலுக்குப் போவது நிச்சயம்.''

முத்தையனுக்கு நன்றாகப் புரிந்தது. வேறு கதியின்றித் தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டு விட்டுக் குழாயில் ஏறினான். மறு நிமிஷம் அந்த ஜன்னல் இருந்த அறையிலும் பிரவேசித்து விட்டான்.

அங்கே மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கட்டிலில் ஒரு பையன் நன்கு உறங்கிக்கொண்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் முத்தையனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அது வேறு யாருமல்ல. அன்று மாலை அவனோடு அன்பொழுகப் பேசிச் சிநேகிதம் செய்துகொண்டிருந்த சுந்தரம்தான்! இது அவன் வீடு தான் என்பது தெரிந்தது.

முத்தையன் ஒரு கணம் யோசித்தான். இதுவும் ஒரு நன்மைக்குத் தான் என்று அவனுக்குத் தோன்றியது. துரிதமாக வேலை செய்யும் மூளையுடன் அவன் சுந்தரத்தை எழுப்பினான்.

கண் விழித்த சுந்தரத்துக்கு ஆச்சரியப்படக்கூட அவகாசமில்லை. 'உஷ், பேசாதே. அப்புறம் நிதானமாக விஷயத்தைச் சொல்கிறேன். முதலில் ஒரு வடம் கெட்டிக் கயிறு இருந்தால் கொண்டு வா'' என்று அவன் காதில் சொன்னான் முத்தையன். சுந்தரம் ஆச்சரியத்தால் பிதுங்கும் விழிகளுடன் எழுந்து ஓசை செய்யாமல் உள்ளே போனான். எங்கோ தேடித் துருவி ஒரு வடம் தாம்புக் கயிற்றுடன் திரும்பி வந்தான்.

முத்தையனின் கைகள் அவன் மூளையுடன் போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்தன. கயிற்றின் ஒரு முனையில் பெரிய சுருக்கொன்று தயாராகியது. பையன்கள் இருவரும் ஜன்னலண்டை வந்தனர். அண்ணாந்து பார்த்த வண்ணம் கீழே மலைமனிதன் நிற்பது தெரிந்தது. அவன் எதுவும் சந்தேகிக்கு முன்பே முத்தையன் வீசிய கயிறு நேரே வந்து மலை மனிதனின் கழுத்தில் விழுந்தது. அவ்வேலையில் பழகிய கைகளுடன் சுருக்கைச் சட்டென்று இழுத்தான் முத்தையன்.

இரும்புச் சங்கிலியானால் கூட உடைத்தெறியும் பலம் இருந்தது மலை மனிதனுக்கு. ஆனால் கழுத்தில் சிக்கிய கயிறு! சுவாசக் குழாயை நெரித்து அவனை மூச்சுவிட முடியாது செய்தது. ஒரு நிமிஷ காலம் வலையினின்று தப்ப முயலும் புலி போலப் போராடினான். பயனில்லை. கயிறு இன்னும் கெட்டியாகப் பற்றியது. மறு கணம் பிரக்ஞையின்றிக் கீழே விழுந்தான்.

சுந்தரத்தின் தகப்பனாரும் ஊராரும் முத்தையனைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடினார்கள். முன்னவர் பணத்தாலும் இதர வெகுமதிகளாலும் அவனை அபிஷேகம் செய்தார்கள்.

அரை உயிராகிக் கிடந்த பக்காத் திருடனைப் பிடித்துக்கொண்டு போக வந்த போலீஸ் அதிகாரிகளும் முத்தையனை வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

எனினும், புகழ்ச்சியாலும் பணத்தாலும் தலை கிறுக்கிவிடாத அந்தச் சிறுவன் தன் குலத் தொழிலைத் தொடர்ந்து புரிவதற்குக் குடும்பத்துடன் அடுத்த ஊரை நோக்கிப் பயணமானான்.

அதில்தான் அவனது உண்மைப் பெருமை இருந்தது.

# பெருந்தன்மை

**எஸ். ஜி. கைலாஸ்**

நாம் ஏதாவது தவறு செய்து அதை யாராவது எடுத்துச் சொன்னல், நமக்கு எப்படி இருக்கிறது? அதுவும் நாலு பேருக்கு மத்தியில் சொல்லி விட்டாலோ, கேட்கவே வேண்டாம்! சிற்சில சமயங்களில் அந்தத் தவற்றைக்கூடச் சரியென்று சொல்லிச் சாதிக்கத் தோன்றுகிறதல்லவா? அப்படி இருக்க, தான் சரியாக எழுதியதைத் தவறென்று ஒருவர் சொல்ல, அதைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டு, அவ்வாறு சுட்டிக்காட்டியவரின் மானத்தையும் காப்பாற்றி, கௌரவித்து அனுப்பவேண்டுமென்ருல் எவ்வளவு சகிப்புத் தன்மையும் பெருந்தன்மையும் இருக்க வேண்டும்!

முகலாய அரசர்களில் நாசிருத்தீனைப்பற்றி நாம் அறிவோம். அவன் ஔரங்கசீப்பைப் போலவே தன் உழைப்பின் மூலம் கிடைத்த ஊதியத்தைக்கொண்டே வாழ்க்கை நடத்தி வந்தான். குடிகளின் வரிப் பணத்தை மக்களுக்காகச் செலவு செய்யாது, தன் சொந்தச் செலவிற்கு எடுத்துக் கொள்வதைப் பெரிய பாவமாகக் கருதிவந்தான். ஆகையினுல்தான், சர்க்கார் கஜாணவிலிருந்து தனக்காக ஒரு காலணுவும் எடுத்துச் செலவிடாத நாசிருத்தீனைச் சரித்திரம் புகழுகின்றது. நாசிருத்தீன் தன் காலத்திய சிறந்த எழுத்



தாளர்களில் ஒருவனுக இருந்தான். அவன் எழுத்துக்கள் மணி மணியாக முத்துக்கள் கோத்ததுபோ லிருக்கும். குரானின் பிரதிகள் எழுதித் தயார் செய்து, அதை விற்று, அதனுல் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தன் ஆடம்பர மற்ற எளிய வாழ்க்கையை நடத்திவந்தான் நாசிருத்தீன்.

ஒரு நாள் காலையில் நாசிருத்தீன் பல பெரியோர்களுக்கு மத்தியில் உட்கார்ந்து அரசாங்க விஷயமாகச் சம்பாஷித்துக்கொண் டிருந்தான். அப்பொழுது அரசன் எழுதி முடித்த குரானின் பிரதி ஒன்று பக்கத்திலிருந்தது. நாசிருத்தீனைச் சந்தித்துப் பேசுவதற்காக வந்த ஒரு முகம்மதிய மௌல்வி சாகிப் பக்கத்தில் அமர்ந்து குரானின் பிரதி ஒன்றைக் கையிலெடுத்துப் புரட்டிப் பார்த்தார். சற்று நேரத்தில் அரசன் மௌல்வி சாகிப்பைப் புன்முறுவலுடன் வரவேற்று அவர் வந்த விஷயமாக உரையாடத் தொடங்கினுர். கடைசியில் விடை பெற்றுக்கொண்டு செல்லும் பொழுது மௌல்வி சாகிப், நாசிருத்தீனிடம் அவர் எழுதிய குரானின் பிரதியில் ஒரு பக்கத்தைக் காண்பித்து அதிலுள்ள ஒரு வார்த்தையைச் சுட்டிக்காட்டி அதில் எழுத்துப் பிழை இருப்பதை அறிவுறுத்தினுர். இதைப் பார்த்த அங்குள்ளோரனைவரும் அரசனை அநுதாபத்துடன் நோக்கினர். நாசிருத்தீன் சற்று வியப்புடன் அந்தப் பக்கத்தை நோக்கினுர். பின் அவர் முகத்தில் புன்முறுவலின் ஒரு லேசான கோடு மின்னலைப் போல் பளிச்சிட்டு மறைந்தது. முகத்தில் நிறைந்த அமைதி நிலவியது. எல்லோரும் ஆவலுடன் அரசனைப் பார்த்துக்கொண் டிருந்தனர்.

நாசிருத்தீன் மௌல்வி சாகிப்பைப் பார்த்து மொழிந்தான்: ''புலவர் பெருமானே, தாங்கள் செய்த இவ்வுபகாரத்தை நான் என்றும் மறவேன். உங்கள் உதவிக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நல்லது, நான் அதைச் சரி பார்த்து அப்புறம் தாங்கள் சொல்லியபடி திருத்தி எழுதிவிடுகிறேன்.'' இவ்வாறு சொல்லி ஒரு பென்சிலால் எல்லோருக்கும் முன்னிலையில் அந்தப் பதத்தைச் சுற்றி ஒரு மெல்லிய வட்டம் போட்டான்.

வெற்றியினுல் ஏற்பட்ட பெருமிதத்துடன் மௌல்வி சாகிப் அவ்விடத்தை விட்டு அகன்ருர். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சபையோர்கள் அரசனின் பணிவையும் பெருந்தன்மையையும் வெகுவாகப் பாராட்டிவிட்டுச் சென்ருர்கள். எல்லோரும் சென்ற பிறகு அரசன் நாசிருத்தீன் ஒரு ரப்பரை எடுத்துத் தான் அடையாளமாக வட்டம் போட்டிருந்த பென்சிலின் கோட்டை மெதுவாக அழித்துவிட்டு, குரானின் பிரதியைப் பத்திரப்படுத்தினுர். ஆரம்பத்திலிருந்து நடந்தவற்றையெல்லாம் கவனித்துக்கொண் டிருந்த நாசிருத்தீனின் நண்பருக்கு இது மிகவும் ஆச்சரியத்தை விளைவித்தது. அவர் நாசிருத்தீனை வினவினுர்: ''என்ன இது, தாங்கள் மௌல்வி சாகிப்பிடம் சொன்னபடி அப்பதத்தைத் திருத்தாமல் அப்படியே மூடி வைத்துவிட்டீர்களே. மேலும் அடையாளத்தையும் இப்பொழுது அழித்துவிட்டீர்களே! பிறகு எப்படி அதைக் கண்டு பிடிப்பீர்கள்?''

இதைக் கேட்ட நாசிருத்தீன், ''நண்பரே, நான் எழுதிவைத்திருந்த பதம் தவறல்ல. சரியானதுதான். ஆகவே அதை மாற்றி எழுதவேண்டிய அவசியமே இல்லை'' என்று சொன்னுன். நண்பர் மிகுந்த வியப்புடன் மறுபடியும் வினவினுர்: ''அப்படியானுல் நீங்கள் அப்பொழுதே அவரிடம் அதை ஏன் சொல்லவில்லை?''

நாசிருத்தீன், ''மௌல்வி சாகிப் கற்றறிந்த அறிவாளி. யானைக்கும் அடி பிசகும் என்ற முறையில் அவர் தவறிவிட்டார். நாலு பேருக்கு மத்தியில் அதைச் சொல்லி அதனுல் அவர் மனம் புண்படுவதை என் உள்ளம் எப்படிச் சகிக்கும்? நான் அவ்வாறு செய்ய விரும்பவில்லை.''

அரசனின் விநயமான பதிலைக் கேட்ட நண்பர் அரசனின் பெருந்தன்மையை மனத்திற்குள் மிகவும் வியந்துகொண்டே விடைபெற்றுக் கொண்டு சென்ருர்.

# பால சோதிடம்

தம்பி




குழந்தைப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரிடம் நேற்றுப் பேசிக் கொண்டிருந்தேன்.

''எல்லாப் பத்திரிகைகளிலும் சோதிடப் பகுதி ஒன்று இருக்கிறதே. ஆனால் குழந்தைப் பத்திரிகைகளில் அந்தப் பகுதி இல்லையே. நீங்கள் ஏன் அதை ஆரம்பிக்கக்கூடாது?'' என்று கேட்டேன்.

''குழந்தைப் பத்திரிகையில் சோதிடப் பகுதியா? அது எப்படி இருக்கும்? யார் அதை எழுதுவது? எப்படி எழுதுவது?'' என்று ஆச்சரியப்பட்டார் ஆசிரியர்.

அவர் கேள்விக்கு விடை யளிக்கும் விதத்தில் நான் வீட்டுக்கு வந்ததும் ஒரு 'மாடல்' சோதிடப் பகுதி எழுதிப் பார்த்தேன்.

(என்ன? எனக்குச் சோதிடம் தெரியுமா என்று கேட்கிறீர்கள்? இதைப் படித்துப் பாருங்கள்; உங்களுக்கே தெரியும்)

நான் எழுதிய மாதவாரி பலன்களின் சுருக்கத்தைக் கீழே தருகிறேன்:

**ஏப்ரல்** மாதத்தில் இளைஞர் பலருக்கு மனச் சஞ்சலமும் ஏற்படுவதுண்டு; சிம்ம ராசிக்காரர்களுடைய உடல் நலம் பாதிக்கப்படலாம். மாதக் கடைசியில் கடகம் முதல் மிதுனம்வரை ராசிக்காரர்கள் தைரியமாயிருப்பது நல்லது.

**மே** மாதத்தில் துலா ராசிக்காரர்களுக்குச் சோர்வு தட்டும்; மேஷ ரிஷப மகர ராசிக்காரச் சிறுவர் சிறுமிகளுக்கு வெளியூர்ப் பிரயாணம் நேரிடலாம். கன்னி, விருச்சிக, கும்ப ராசிக்காரர்கள் தமது நண்பர்களை விட்டுப் பிரிய நேரிடும். பொழுதுபோக வகை தெரியாது கடக ராசிக்காரர்கள் தவிப்பார்கள்.

**ஜூன்** மாதத்தில் கும்ப ராசிக்காரர்கள் கற்பனை நிறைந்து விளங்குவார்கள்; அவர்கள் கதை கட்டுரைகள் எழுதலாம். இதற்கு 10 முதல் 17வ வரை ஏற்றது. 20-25வ தேதிகள் நல்லதல்ல. கல்வி விஷயத்தில் மிதுனத்தில் முதல் பாதக்காரர்களும் துலா ராசியின் கடைசிப் பாதக்காரர்களும் ஏமாற்றமடைவர். விருச்சிக, கும்ப ராசிக்காரர்கள் கல்வி விஷயத்தில் வெற்றி அடைவார்கள். மகர ராசிக்காரர்களும் மீன ராசிக்காரர்களும் இந்த மாதத்தில் நீர் நிலையங்களில் குளிக்கும்போது ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

**ஜூலை** மாதத்தில் பொதுவாக எல்லா ராசியில் பிறந்தவர்களுடைய பெற்றோருக்கும் அதிகச் செலவு இருக்கும். மிதுனம் கன்னி ராசிப் பெண்களுக்குப் புதிய ஆடைகள் கிடைக்கும். கும்ப ராசியில் பிறந்த சிறுவர் எழுதிய கட்டுரை கதைகள் பிரசுரமாகலாம்.

**ஆகஸ்டு** மாதத்தில் மேஷம் துலாம் மகர ராசிக்காரர்களுக்கு வாய்க்கு இனிய பண்டங்கள் கிடைக்கும். இதர ராசிக்காரர்கள்



அவர்களிடம் நண்பராயிருப்பதால் அவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

**செப்டம்பர்** மாதத்தில் சிம்ம ராசிக்காரர்களுக்கும் கும்ப ராசிக்காரர்களுக்கும் உச்சமான காலம். சிறிதும் பெரிதுமான வெற்றிகள் பல அவர்களை அடையும். மற்ற ராசிக்காரர்கள் போட்டியில் இறங்காமலிருப்பது நல்லது. மகர ராசிப் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். மற்ற ராசிப் பெண்களுக்குப் புதிய உடைகளும் புதிய சிநேகிதிகளும் கிடைக்க வசதி ஏற்படும்.

**அக்டோபர்** மாதத்தில் சிறுவர் சிறுமியர் உள்ளம் குதூகலமாயிருக்கும். பொதுவாக எல்லா ராசிச் சிறுவர் சிறுமியரும் அன்புடன் நடந்துகொள்வார்கள். கன்னியா ராசியில் பிறந்தவர்களிடம் உள்ள துர்க் குணங்கள் நீங்கும். ஆனால் பணச் செலவு அதிகரிக்கும்.

**நவம்பர்** மாதத்தில்..

[உங்கள் காதோடு சொல்கிறேன். இந்த மாதத்து ராசி பலனை நான் எழுத மாட்டேன். தீபாவளி வருவதால் ஒரே பட்டாசு மும்முரத்தில் எல்லாரும் இருப்பீர்கள். இந்த ராசி பலனைப் பார்க்கவே மாட்டீர்கள்.]

**டிசம்பர்** மாதத்தில் மேஷ மிதுன கன்னி ராசிக்காரர்களுக்கு ஜலதோஷமும், ரிஷப கடக சிம்ம ராசிக்காரர்களுக்கு இருமலும் பற்றும். மகர மீன தனுசு ராசியில் பாடத் தெரிந்தவர்களுக்குப் பாராட்டு கிடைக்கலாம். விருச்சிக கும்ப ராசிக்காரர்கள் (நன்றாய்ப் படித்திருந்தால்) பரீக்ஷைக்குப் பயப்பட வேண்டாம்.

**ஜனவரி** மாதத்தில் மகரம் முதல் தனுசுவரை ராசியில் பிறந்தவர்களுக்கு அதிலும் சென்னையில் இருப்பவர்களுக்கு உறவினரும் நண்பர்களும் விருந்தாளிகளாக வருவார்கள். பல கேளிக்கைகளுக்குச் செல்ல வசதி கிடைக்கும். ஆனால் பணச் செலவு அதிகரிக்கும். மன அமைதி இழக்க நேரிடலாம்.

**பிப்ரவரி** மாதத்தில் மேஷம் முதல் மீனம்வரை ராசியிலுள்ளவர்கள் புதுப் பொறுப்பு ஒன்றும் ஏற்காமலிருப்பது நல்லது. அவர்களுக்கு நாட்கள் வேகமாக ஓடுவது போல் தோன்றலாம். கன்னி ராசிக் கன்னிகள் சிலருக்குக் கல்யாணப் பேச்சு எழுந்தால் வியப்படைய வேண்டியதில்லை.

**மார்ச்** மாதத்தில் விருஷபம், சிம்மம், விருச்சிகம் போன்ற ராசிகளில் பிறந்தவர்கள் உடற் பயிற்சியில் சிறந்து விளங்குவார்கள். சிலர் விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றியும் புகழும் அடையலாம். மற்ற ராசிக்காரர்கள் அவர்களைப் பாராட்ட வசதி ஏற்படும்.

இவ்வளவு தூரம் சோதிடம் எழுதியபின் ஒரு விஷயத்தில் நான் உங்களைச் சோதிடம் கேட்கிறேன். இக் கட்டுரையை ஆசிரியர் வெளியிடுவாரா?





# பாலர் கவி அரங்கம்

## வெள்ளைப் பூனை

வெள்ளைப் பூனை வருகுது
மெள்ள மெள்ள வருகுது;
சாந்த மான முகத்துடன்
சத்த மின்றி வருகுது.

திருட்டுப் பூனை வருகுது
திறமையுடனே வருகுது;
பதுங்கிப் பதுங்கி வருகுது
பாலைக் குடிக்க வருகுது.

துன்பம் கொடுக்கும் எலிகளைத்
துள்ளிப் பிடிக்க ஓடுது;
மென்மை யான கால்களால்
மின்னல் போலப் பாயுது.

எலியைக் கண்ட பூனைபோல்
இருந்தி டாதே தம்பிநீ,
எவரி டமும் அன்புடன்
இன்ப மாகப் பழகிடு.

—'வள்ளிதாசன்'

## ரேடியோ

விஞ்ஞான உலகில் மாந்தரின்
அஞ்ஞான இருளை யகற்றியே
மெய்ஞ்ஞானந் தனையே புகட்டிடும்
சாதன மாகும் ரேடியோ!

பற்பல நாட்டுச் செய்திகளும்
பண் பொருந்திய பாடல்களும்
அற்புதமான பல் நாடகமும்
அழகுற அளிக்கும் ரேடியோ!

வாழ்க்கைக் கான வழிதுறைகளை
வையகத்தோர்கட் கெடுத்தியம்பி
இயல் இசை கூத்து மூன்றினையும்
வளரச் செய்யும் ரேடியோ!

கவலை போக்கும் 'பீச்'சையும்
களிப்பையூட்டும் 'பார்க்'கையும்
ஒட்டல் இல்லம் அனைத்தையும்
உவகை யாக்கும் ரேடியோ!

—ஜே. எம். சாலி.

# மனமாற்றம்

**ஆர். ஜயா**



அன்று அந்தப் பள்ளியே அமர்க்களப்பட்டது. காரணம் அன்று கடைசித் தினம். மறு தினத்திலிருந்து கோடை விடுமுறை. அதனால் அந்தப் பள்ளியின் இறுதி வகுப்பு மாணவர்கள் சேர்ந்து ஆசிரியருக்கு ஒரு விருந்து வைத்திருந்தனர். அதில் கதம்ப நிகழ்ச்சியும் சேர்த்திருந்தது. அதன் பொருட்டுத்தான் மாணவர்கள் இங்கும் அங்கும் ஓடி அலைந்துகொண்டிருந்தனர். என்றும் இல்லாச் சுறுசுறுப்பு அன்று மாணவரிடையே காணப்பட்டது. அத்துடன் கூடவே கவலையின் கீற்று, கணத்திற்குக் கணம் தோன்றி மறைந்துகொண்டிருந்தது மாணவர் முகத்திலே. ஆனால் அந்த வகுப்பு ராமுவுக்கோ ஒரு கவலையும் தோன்றவில்லை. ஏன், பார்க்கப் போனால் இத்தனை நாட்களைவிட அன்றுதான் அதிகச் சந்தோஷமாகக் காணப்பட்டான் அவன் என்று சொல்ல வேண்டும்.

‘‘டேய் ராமு! இந்தப் பெஞ்சியைச் சற்றுப் பிடியடா! தடியன் மாதிரி நின்றுகொண்டிருக்கிறாயே?’’ என்று சகமாணவன் ரகு அவனைக் கேட்டான்.

‘‘போடா ரகு! இதுவரை செய்திண்டாப்போல இப்போதும் செய்கிறதுதானே, என்னைக் கூப்பிடாமேயே? இதற்குமட்டும் என்ன என் உதவி வேண்டிக் கிடக்கு?’’

‘‘ராமு! கடைசி தினத்தன்று கூடவா உன் அலட்சிய புத்தி போகலை? அங்கே பார்! ஆசிரியர்கள் அனைவரும் நம் அழைப்பிற்கு இணங்கி வந்து காத்துக்கொண்டிருக்கின்றனர். சீக்கிரம் வாயேன், இந்தப் பெஞ்சியைச் சற்றுப் பிடி. கொண்டுபோய்ப் போடலாம். எவ்வளவு நேரம் அவர்கள் நின்றுகொண்டிருப்பார்கள்?’’

‘‘நிற்கட்டும், சிறிது நேரம் நின்றால்தாண்டா தெரியும் அந்தக் கஷ்டம். எத்தனை நாள் மணிக்கணக்கிலே நம்மை நிற்க வைத்திருப்பார்கள்? அந்த அநுபவத்தை இப்போதுதான் சற்று உணரட்டுமே.’’

‘ராமு! நீ சொல்வது கொஞ்சங்கூட நன்றாயில்லை. இன்று கடைசித் தினம். இந்த ஒரு நாளாவது ஆசிரியர்களின் கோபத்திற்கு நாம் ஆளாகாமல் இருக்கவேண்டும்.

எதற்காக வீண் பிடிவாதம் செய்கிருய்?''

''போங்கடா, விழுந்து விழுந்து கும்பிடுங்கடா உங்களுக்கு இஷ்டமிருந்தா. இனி எனக்கு அவர்களைப்பற்றிக் கவலை இல்லை. போதும்; இதுவரை அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு பட்ட கஷ்டமெல்லாம்.''

அதற்கு மேலும் வார்த்தையை வளர்க்க விருப்பமில்லாத ரகு இன்னெரு மாணவனை அழைத்துப் பெஞ்சியைப் பிடிக்கச் சொல்லி, கொண்டுபோய்ப் போட்டான்.

ஒன்றுமில்லாத ரகு தன்னை வந்து அதிகாரம் செய்கிருனே என்பதை எண்ணிப் பார்க்கும்போது, ராமுவுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. இதுவரை மாணவர் சங்கக் காரியதரிசியாக இருந்து அவன் அதிகாரம் செய்து வந்தது போய், ரகுவுக்கல்லவா அவன் அடங்கி நடக்க வேண்டியிருக்கிறது! இதை எண்ணிப் பார்க்கும்போது அவனுக்குத் துக்கம் பீரிட்டுக்கொண்டு வரும்போல் தோன்றியது! இதற்கெல்லாம் காரணம் அந்த வாத்தியார்தானே!

* * *

அந்தப் பள்ளியிலே ராமு நான்காம் வகுப்பிலேசேர்க்கப்பட்டான். அது முதல் 2-ஆம் படிவம் முடிய அவன்தான் வகுப்பில் முதலில் வருவான். மாணவர்கள் அனைவரும் அவனுக்கு மதிப்புக் கொடுத்து வந்தனர். ஆசிரியர்கள் அத்தனை பேரும் அவனிடம் அன்பு காட்டி வந்தனர். ஏன்? ராமு வருஷம் தவருது பரிசுகள் பல பெற்று வந்தான். அத்துடன் மாணவர்களுக்கு என்றிருந்த பல முக்கியத் தலைமை ஸ்தானங்களையும் இவனே உரிமையாக்கி வந்தான்.

காலச் சக்கரம் சுழன்றது. மூன்ரும் படிவத்திலே காலடி எடுத்து வைத்தான். அந்த வருஷந்தான அந்த வகுப்புக்குப் புது வாத்தியார் வரவேண்டும்! என்றைத் தினம் அந்த வகுப்பிலே நுழைந்தானே அல்லது அந்த வாத்தியார்தான் நுழைந்தாரோ, அதிலிருந்து துரதிருஷ்டம் என்னும் பேய் அவனைப் பிடித்துக்கொண்டு விட்டது.

கால் வருஷப் பரீக்ஷையிலே கண்டு கொண்டு விட்டான், புது வாத்தியார் தன்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிருர் என்பதை. எந்தப் பாடத்திலே அவன் மிகவும் திறமைசாலி என்று கருதினுனே, அந்தப் பாடத்திற்கு நேராகக் கீழே சிவப்புக் கோடிட்ட முன்னேற்ற அறிக்கைத் தாளை வாங்கிப் பார்த்தபோது, அவன் மனசு 'பக்' என்றது. ஏன், உடலிலே ஒரு வித எரிச்சல்கூட உண்டாகியது. 'நெற்றிக் கண்' ஒன்று தனக்கில்லையே என்ற குறையை அப்போதுதான் உணர்ந்தான். அதிலிருந்து ஆசிரியரை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. ஒரு நாள் அவர் வகுப்பிலே இருக்கும்போதே தன் ஹோதாவைச் சிறிது காட்ட வேண்டும் என்று நினைத்தான். நினைத்தபடியே அன்று அவருக்கு முன்னுலேயே மாணவர்களை அதிகாரம் செய்தான். அதன் பலன் 'மானீட்டர்' பதவி பறிபோயிற்று. ரகு அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டான். இதைக் கண்டதும் அவன் மனம் கொதித்தது. மாணவர் சங்கத்திலே வாத்தியாரைப் பற்றிக் குறை கூறினுன். அன்றைத் தினமே 'சங்கக் காரியதரிசி' என்னும் பதவியையும் இழந்தான். மேலும் 'குரூப் லீடர்', 'பூஜைக் கமிட்டியின் தலைவர்' என்ற விருதுப் பெயர்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகப் போக்கடித்துக்கொண்டான். அரை வருடப் பரீக்ஷயின் மார்க்குகளைக் கண்டதும் எரியும் தீயிலே எண்ணெய் ஊற்றியதுபோல் இருந்தது.

அணுக்குண்டை யெல்லாம் கடலிலே எரிந்து விடும்படி மேல் நாட்டாருக்கு யோசனை கூறிவரின்மேல்கூடக் கோபம் கோபமாக வந்தது. கிடைத்திருந்தால் ஒன்று தன் கையினுலோ அல்லது ஆசிரியரின் தலையிலே அவரே நேரிலோ போட்டிருந்தால்..எவ்வளவு சந்தோஷமாக இருந்திருப்பான்!

புதுவாத்தியார் வந்ததிலிருந்து தன் நிலையை எண்ணிப்பார்த்தான்.

21797

மரத்தடி ஜோசியர் கூறியது முற்றிலும் உண்மை என்பதை அப்போதுதான் உணர்ந்தான் ஆம். அன்று பரீட்சை எழுதிவிட்டு வருஷப் பரீட்சையிலே தேர்வு ஆகுமா என்று தெரிந்துகொள்ள ஒரணு எடுத்துக்கொண்டு ஜோசியரை நாடினுன். அவர், 'பாஸ் செய்வது நிச்சயம். ஆனல் இந்த வருஷம் உனக்குப் போதாது. மேலும் ஏதாவது கஷ்டங்கள் நேரிடலாம். ஆனல் முடிவில் உனக்கு நன்மையே தரும்'' என்ருர். ஆம், அவர் கூறியது இன்று சரியாக நடந்துவிட்டது. இன்னும் மூன்று மாதங்களை எப்படியாவது ஓட்டிவிட்டால்..அவன் அதிருஷ்டசாலிதான்.

அவன் எதிர்பார்த்த காலமும் வந்துவிட்டது. எப்போது அந்த மூன்றும் படிவத்தை விட்டுத் தாண்டப்போகிருேம் என்ற எண்ணமே அவனை அலைக்கழித்து வந்தது. அந்தக் காலமும் வந்துவிட்டது.

''டேய் ராமு! வாடா, மீட்டிங் தொடங்கியாச்சு. இன்னும் சற்று நேரத்திலே நீ ஸ்டேஜில் இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு நீ இங்கே எதையோ பறிகொடுத்தவன் மாதிரி நின்றுகொண் டிருந்தால்? போ, ஓடிப்போய், சீக்கிரம் டிரஸ் செய்துகொள்'' என்று 'மானீட்டர்' ரகு வந்து அழைக்கவே சிந்தனை அலையினின்று ராமு விடுபட்டான். ''பறிகொடுத்தவன் மாதிரி என்ன, எல்லாவற்றையும் நீங்கள் தானே பறித்துக்கொண்டுவிட்டீர்கள். இன்னும் என்ன இருக்கிறது பறித்துக்கொள்ள?'' என்று கேட்கவேண்டும்போல் தோன்றியது ராமுவுக்கு. ஆனல் அது சமயமல்ல என்று தெரிந்துகொண்டு 'விர்' என்று நடையைக் கட்டினுன் 'கிரீன் ரூமு'க்கு.

* * *

கடவுள் வணக்கத்திற்குப் பிறகு நிகழ்ச்சி நிரலில் கண்டபடி கதம்ப நிகழ்ச்சி நடைபெற்றது. குறவன், பாம்பாட்டி, வேடன், உழவன், வண்ணுன் போன்று ஆளுக்கொரு வேடம் தாங்கி மேடைமீது வந்து நடித்துவிட்டுச் சென்றனர். கடைசியாக வாத்தியார் வேடத்திலே ஒரு மாணவன் காட்சியளித்தான். தலையில் தலைப்பாகை, கண்களில் மூக்குக் கண்ணுடி, கையிலே பிரம்பு, இன்னெரு கையிலே திருக்குறள் புத்தகம் முதலானவைகளுடன் தோன்றினுன். தத்ரூபம் அந்த வகுப்பு ஆசிரியரைப் போலவே காட்சி அளித்தான். மேடைக்கு வந்ததுமே, ''ஏய்! அங்கே என்ன இரைச்சல்? எல்லோரும் எழுந்து நில்லுங்கடா! டேய் ராமு, போடா வெளியே, ஸ்டுப்பிட், மணி என்ன ஆச்சு தூன்னு பார்த்துட்டு, கிளாஸுக்கு வா; போ. இங்கே நிற்காதே'' என்று சொல்லும்போது, மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவருமே ஆரவாரம் செய்தனர். 'சபாஷ்! ராமுவுக்குத்தான் பஸ்ட் பிரைஸ்.'' அவனுடைய வாத்தியாரே கூறும்போது, ராமுவுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை வாத்தியாரைப் பழி வாங்கும் நோக்கத்துடன் மேடைமீது தோன்றினுன்.

அவரை நேரில் கேவலமாகப் பேச மாட்டாத குறை அவ்வளவையும் மேடையில் பேசிவிட்டான். அதை அவர் உணர்ந்து வருத்தப்படுவார், அல்லது தன்னைக் கோபித்துக்கொள்வார் என்றெல்லாம் கருதினுன். ஆனல் அவனுக்குத் தான் முதல் பரிசு என்று ஆசிரியர் ஆனந்தத்தோடு கூறும்போது அவனை ஈட்டி கொண்டு குத்துவதுபோல் இருந்தது.


ஆசிரியர்கள் சிற்றுண்டி அருந்திய பிறகு பேச ஆரம்பித்தனர். முதன் முதலில் பேசியது அந்த இறுதி வகுப்பு ஆசிரியர்தான். தலைமை ஆசிரியரும் அவரைத்தான் பேசச் சொன்னுர். அவர் கூறினுர்.

''அன்புள்ள மாணவர்களே!

உங்கள் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் உள்ளம் மகிழ்ந்தோம். நீங்கள் நல்ல முறையிலே பழகிவிட்டு இன்று வெளியே செல்கின்றீர்கள். ஆசிரியர்களாகிய நாங்கள் சிலசமயங்களிலே உங்களிடம் கொடுமையாக நடந்துகொண் டிருக்கலாம். ஆனல் அது உங்கள் நன்மையின் பொருட்டாகத்தான் என்று கருதவேண்டும். உங்களில் பலர் உயர்நிலைப்பள்ளியிலும் கல்லூரியி

லும் தொடர்ந்து படிக்கலாம். அங்கெல்லாம், 'இவன் ஆசிரியர் யார்? எந்தப் பள்ளியிலிருந்து வந்தான். இவ்வளவு ஒழுங்கும், அறிவும், அடக்கமும், கட்டுப்பாடும், உண்மையாகவும் இருக்கிறானே!' என்றெல்லாம் மற்ற ஆசிரியர்கள் ஆச்சரியப்படவேண்டும். அதே முறையிலே ஒழுங்காக நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் நீங்கள் எங்களுக்குச் செய்யும் கைம்மாறு ஆகும். இப்போது என்னைப் போலவே ராமு வேடம் தரித்துக்கொண்டு பேசினான். ஆனால் என் உள்ளத்திலிருக்கும் விருப்பத்தை அவன் சிறிய உள்ளம் அறியாது. அவனை அதிகம் கொடுமைப் படுத்தியதாக அவன் கருதியிருக்கலாம். உண்மையில் எனக்கு அம்மாதிரியான எண்ணமே கிடையாது. ஆனால் மனிதனுக்குப் பதவி கிடைத்துவிட்டால், அவன் தன் கடமையை மறந்துவிடுகிறான். ஒழுக்கம் தவறுகிறான். அம்மாதிரியான நிலைக்கு நம் அறிவிற் சிறந்த ராமு அடிமையாகி விடக்கூடாதே என்ற ஒரே நோக்கத்துடன்தான் அவனுடைய பதவிகள் பலவற்றைப் பறித்துப் பகிர்ந்தளிக்க நேரிட்டது. அதை இப்போது அவன் உணர்ந்திருப்பான் என்று எண்ணுகிறேன்.''

ஆசிரியர் இருக்கையிலே அமர்ந்தார். அதுவரை மாணவர்கள் அசையாமல் அவர் பேச்சிலேயே ஊக்கமாக இருந்தனர். இவ்வளவு அன்புமிக்க ஆசிரியரைப் பிரிந்துவிடுகிறோமே என்று எண்ணும்போது அவர்களுக்குத் துக்கம் துக்கமாக வந்தது. ராமுவின் கண்களில் நீர் துளும்பியது. வாத்தியார் மீது கொண்ட அருவருப்பெல்லாம் எங்கோ சென்று மறைந்தது! அவர் உள்ளத்தே இவ்வளவு வாஞ்சை வைத்திருக்கிறார் என்பதை அப்போதுதான் உணர்ந்தான். கூட்டமும் முடிந்தது.



மறுநாள் ராமு எங்கோ சுற்றி விட்டு வீடு வந்தான். தன் தந்தை யுடன் யாரோ பேசிக்கொண் டிருப் பதை உணர்ந்தான். குரலும் பழக் கப்பட்ட குரலைப் போன்று இருந் தது. ஜன்னல் வழியாக எட்டி உள்ளே பார்த்தான். அவனுடைய வகுப்பு ஆசிரியர்தான் காணப்பட் டார். ராமுவின் வயிற்றிலே புளி யைக் கரைத்தது. 'என்றும் வராத ஆசிரியர் ஏன் இன்று நம் வீடு வந்தார்? நேற்று நான் அவரைப்போல வேடந்தரித்து அவரைக் கேலி செய்தோமே, அதைத்தான் தந்தையிடம் கூற வந்திருக்கிறாரோ?' என்றெல்லாம் அவன் மனம் எண்ணியது. இவர் கள் பேச்சுச் சத்தம் நன்றாகக் காதில் விழுந்தது.

''ஒருவனைப்பற்றி அதிகம் புகழ் ந்துகொண்டேயிருந்தால் போதும். மகிழ்ச்சிப் போதையிலே தன்னை, தன் அறிவை, கடமையை முற்றி லும் அவன் மறந்துவிடுகிறான். பிறகு சாதாரண நிலைக்கும் கீழாக அவன் கருதப்பட்டு விடுகிறான். இப்படித் தான் ஸார், உங்கள் மகன் ராமு சிறிது சிறிதாகத் தன் மதியை இழந்து வருவதை உணர்ந்தேன். பிள்ளைகளுக்கு முன்பாக அவனைச் சீறிவிழுந்தேன்; மார்க்கைக் குறைத் தேன்; மதிப்பையும் சிறிது குறைத் தேன்; அதன் பிறகுதான் ராமு ஒரு வாறு அடங்கி வாழத் தலைப்பட் டான். நேற்றுப் பாருங்கள், என் னைப் போலவே வேடந்தரித்துப் பேசினான் கூட்டத்திலே. எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவனைத் தொடர்ந்து படிக்க வையுங்கள்.''

அதற்குமேல் ராமுவால் ஒளிந்திருக்க முடியவில்லை. உணர்ச்சி அவனை உந்தித் தள்ளி யது. ஓடோடிச் சென்றான். ஆசிரி யரின் கால்களிலே விழுந்தான்.

''ஸார், என்னை மன்னித்துவிடுங் கள். உங்கள் அன்பை அறியாது தங்களை நான் பழித்துவிட்டேன்.''

''ராமு, எழுந்திரு! உன்மீது தவ றில்லை. இனி ஒழுங்காக நடந்து கொள்.'' ராமுவின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் தேங்கியது. அவன் தந்தையின் முகத்திலே நன்றிகலந்த புன்னகை தவழ்ந்தது.

# அட்டைப் படம்

பாலு விஷமக்காரச் சிறுவன். படுசுட்டி. ஒரு நாள் அவனுடைய அம்மா நிறைய லட்டுகளும் ஜிலேபி களும் செய்துகொண் டிருந்தாள். பாலுவுக்கு நாக்கிலே நீர் ஊற ஆரம்பித்தது. ஆனால் முழுவதை யும் செய்து முடித்தபிறகுதான் தருவேன் என்று அவன் அம்மா கண்டிப்பாகக் கூறிவிட்டாள். தட்டு நிறைய லட்டுகளும், ஜிலேபி களும் 'ரெடி' ஆகிவிட்டன.

எப்போது அம்மா தனக்குத் தரப் போகிறாளோ என ஆவலு டன் நாவிலே நீரூற நின்றான் பாலு.

இந்தச் சமயத்தில்தானா பக்கத்து வீட்டுப் பங்கஜம், ''அம்மாமி..'' என்ற குரலுடன் உள்ளே நுழைய வேண்டும்?

பாலுவின் அம்மா மிகவும் சுவா ரசியமாகப் பங்கஜத்துடன் பேச ஆரம்பித்து விட்டாள். பாலு வுக்கோ தின்பண்டங்களைப் பார்த் ததும் பொறுமை கொஞ்சம் கொஞ்சமாகக் கரையத் தொடங் கியது. அம்மாவோ பேச்சை நிறுத்தக் காணோம்! அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்துத் தின்றால் என்ன? மறுகணம் 'கப்' என்று ஒரு லட்டு வாய்க்குள் சென்றது! முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு முன்கட்டிற்குச் சென் றான் பாலு!

பங்கஜம் சென்றதும் பாலுவின் அம்மா திரும்பினாள். நேரே முன் கட்டுப்பக்கம் போனாள்.

''பாலு, நீ எனக்குத் தெரியா மல் லட்டு எடுத்துவிட்டதாக நினைக்காதே? அப்போது அந்த மாமி இருந்ததால் உன் அசட்டுத் தனத்தைக் காட்டிக்கொள்ளாமல் இருந்துவிட்டேன், உன் உதடுகளே சொல்லுகின்றன, நீ செய்த காரியத்தை'' என்று அம்மா தன் னிடம் வந்து கூறியபோது பாலு வின் தலை வெட்கத்தால் தாழ்ந் தது! பாலு என் தம்பிதான்.

1-5-55 இதழின் அட்டைப் படத்தைக் கண்டதும் இந்தச் சம் பவம் என் ஞாபகத்தில் வந்தது.

—சுப்பிரமணியன், கங்கவல்லி.

# சண்டை தீர்ந்தது

ராமலிங்கம்

சின்னக் கண்ணன் சொன்ன படி:-

என் அப்பா பெரிய ஆபீஸர். ஆனால் முன் கோபக்காரர். என் அம்மா 'லேடீஸ் கிளப்'பின் கௌரவக் காரியதரிசி. ஆனால் ரொம்பப் பிடிவாதக்காரி.

இவர்கள் இருவருக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு நான் திண்டாடினேன். ஏதாவது தகராறு வந்து அப்பாவின் பக்கம் நான் பரிந்து பேசினால் அம்மா என்னை முறைத்துப் பார்ப்பாள். அம்மாவின் பக்கத்தில் பேசினாலோ அப்பா என்னை அடிப்பார். இந்தத் தர்ம சங்கடத்துக்கு நான் என்ன செய்வது?

பொழுது விடியும். என் வீட்டில் அம்மா - அப்பா சண்டை ஆரம்பமாகிவிடும். மத்தியான்னம் சாப்பாட்டுச் சமயத்தில் அது உச்ச நிலையில் இருக்கும்.

அம்மாவைக் 'கிளப்'பிற்குப் போகக்கூடாது என்று அப்பா சொல்லுவார். அம்மா "போகத்தான் போவேன்" என்பாள். "நீ எப்படியாவது தொலை" என்று அப்பா பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்துவிடுவார். அவர் எழுந்து போனபிறகு அம்மா கண்ணைக் கசக்குவாள்.

"ஏனம்மா அழுகிறாய்? அப்பா சொன்னபடிதான் கேளேன்" என்பேன் நான். என் முதுகில் இரண்டு விழும்.

சாயங்காலம் அப்பா வருவார். அம்மா அடித்ததை அவரிடம் சொல்லுவேன். அப்பாவுக்குக் கோபம் வரும். "ஏன் அடித்தாய்?" என்று கேட்பார். "என் பிள்ளையை அடிக்க எனக்கு உரிமையுண்டு" என்பாள் அம்மா. அப்பொழுது நான் அவளை அரவணைத்துக் கொண்டு அவளுடைய மடியில் உட்கார்ந்திருப்பேன்.

"எனக்கும் பிள்ளைதான். நீ அவனைத் தொடக்கூடாது" என்று கர்ஜிப்பார் அப்பா.

"இந்தாருங்கள், உங்கள் பிள்ளையை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்" என்று என்னைத் தள்ளிவிட்டு 'விருட்'டென்று அங்கிருந்து போய்விடுவாள். நான் 'பொத்'தென்று விழுவேன். அடியின் வேகத்தில் எனக்கு அழுகை வரும். அழுதுகொண்டே அப்பாவிடம் போவேன்.

"ஏண்டா அழறே?" என்று அதட்டுவார் அப்பா. முதலில் காட்டிய பரிவும் அன்பும் அதற்குள் எப்படித்தான் மறையுமோ!

இந்தத் தினச் சண்டை ஒரு நாள் உச்ச நிலையை அடைந்துவிட்டது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அப்பா ஆபீஸ் பைல் கட்டுக்களை வைத்துக்கொண்டு ஏதோ வேலை செய்துகொண்டிருந்தார். திடீரென்று அப்பா அம்மாவைக் கூப்பிட்டார்.

அம்மா லேடீஸ் கிளப்பிற்குப் போக அலங்காரம் செய்துகொண்டிருக்கையில் யாரும் அவளைத் தொந்தரவு செய்யக்கூடாது. செய்தால் அவளுக்கு எவ்வளவு கோபம் வரும் என்பதை என் அநுபவத்தில் உணர்ந்திருக்கிறேன். பல தடவைகளில் நான் அவளண்டை அச்சமயத்தில் சேஷ்டைகள் செய்து அடி, உதை வாங்கியிருக்கிறேன். ஆனால் அப்பாவை அவளால் அடிக்க முடியாது. வார்த்தைகளை மட்டும் படபடவென்று கொட்டித் தள்ளத் தெரியும்.

அன்றும் அப்படித்தான் எரிந்து விழுந்தாள்.

"ஏன் இப்படி வீடே அதிர்ந்து விழும்படி இரைகிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அப்பாவின் அறைக்குள் நுழைந்தாள் அம்மா;



''உங்க பத்திரிகை வர வர மோசமாகிக் கொண்டிருக்கு போலிருக்கே!''

''எதனுலே அப்படிச் சொல்கிறேள்?''

''இப்போதெல்லாம் நிறைய பேர் வாங்க ஆரம்பிச்சுட்டாங்களே, அதனுல்தான் கேட்டேன்!

—P. கலாசாமி, தூத்துக்குடி.

---

அப்பாவின் ஆபீஸ் சம்பந்தமான கடிதம் ஒன்று காணவில்லை. அதைப்பற்றிக் கேட்பதற்குத்தான் அவர் கூப்பிட்டிருக்கிருர்.

ஆனுல் அம்மாவுக்குச் சமய சந்தர்ப்பம் தெரியுமா, என்ன? ஆபீஸ் வேலைகளில் ஆழ்ந்து கிடக்கும் ஒருவரிடத்தில் போய்க் கத்தினுல் அவருக்கு எப்படி இருக்கும்? அதுவும் ஒரு முக்கியமான கடிதம் காணுமல் இருக்கும்பொழுது? என் அப்பாவோ முன் கோபக்காரர். இந்தச் சமயத்தில் அவருடைய கோபத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

''நான் முக்கியமான 'பைல்' சம்பந்தமாகக் கேட்டால் நீ இடக்காகவா பேசுகிருய்?'' என்று கேட்டுக்கொண்டே அம்மாவின் கன்னத்தில் ஓர் அறை விட்டார்,

அதற்கு முன் அப்பா அடித்து நான் பார்த்ததே இல்லை. முன் கோபக்காரரே ஒழிய, கை நீட்டி அடித்ததில்லை. அம்மாவும் அதற்கு முன் அவ்வளவு துடுக்காகப் பேசியதில்லை.

என்ன செய்வது? எல்லாம் போதாத வேளை!

வார்த்தைகள் தடித்தன. அப்பா கோபத்தில் சீறினுர்; அம்மா ஆத்திரத்தில் படபடத்தாள்.

''மேஜையில் வைத்திருந்த கடிதம் எங்கே திடீரென்று காணுமல் போய்விடும்? வீட்டு நிர்வாகத்தில் அக்கறை இருந்தால் தானே? 'லேடீஸ் கிளப்' அது, இது என்று ஊர் சுற்றிக்கொண்டிருந்தால் 'பைல்'மாத்திரமா போகும்? வீடே கொள்ளை போய்விடும்'' என்று கத்தினுர் அப்பா.

''வீடு கொள்ளை போனுல் பரவாயில்லை. என் அப்பா பெரிய பணக்காரர். போனதை நிரப்ப உங்களை விட அவருக்குச் சக்தி உண்டு'' என்று துடுக்காகப் பதிலளித்தாள் அம்மா.

அப்பாவுக்குக் கோபம் எல்லையை மீறிவிட்டது. ''உன் அப்பா பெரிய பணக்காரர் என்ருல் அவர் வீட்டுக்கே போய்விடு'' என்று கூறிக்கொண்டே அம்மாவின் மிருதுவான கன்னத்தில் மறுபடியும் பளாரென்று அறைந்து விட்டார்.

ஆனுல் அம்மா அடியை லட்சியம் செய்யவில்லை. 'விருட்'டென்று அப்பாவின் அறையை விட்டு வெளியேறி என் தாத்தா வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

என்னைப்பற்றிக்கூட அவள் கவலைப்படவில்லை. எனக்கு அழுகை அழுகையாய் வந்தது.

அம்மா போய் ஒரு வாரம் ஆகிவிட்டது. வீட்டில் நானும் அப்பாவும் மட்டும்தான் இருந்தோம். சமையல்காரி வேளா வேளைக்குச் சாதம் போட்டாலும் அம்மா கையால் சாப்பிடுவது போல் இருக்குமா? வெள்ளித் தட்டில் சாதம் பிசைந்து வைத்து ஒவ்



வொரு கவளமாகக் கொடுத்து, கதை சொல்லிச் சாப்பிடச் செய்வாளே!

எனக்கு அப்பாவின் மேல் கோபம் கோபமாய் வந்தது. அப்பா அடித்ததால்தானே அம்மா வீட்டைவிட்டுப் போய்விட்டாள்!

அம்மா இல்லாமல் வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை எனக்கு. மெதுவாக ஒரு நாள் அப்பாவுக்குத் தெரியாமல் பாட்டி வீட்டிற்குக் கிளம்பிவிட்டேன்.

பாட்டி வீட்டில் தாத்தாவும் பாட்டியும் எங்கேயோ போயிருந்தார்கள். அம்மா மாத்திரம் ஹாலில் உட்கார்ந்துகொண்டு, ஏதோ புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள்.

மெதுவாக நான் தூரத்தில் இருந்தபடியே, ''அம்மா'' என்று கூப்பிட்டேன். அருகில் செல்லப் பயம்.

அம்மா நிமிர்ந்து பார்த்தாள். ''என் அருமைக் கண்ணு, நீயும் வந்துட்டியா? நீ இல்லாமல் நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?'' என்று என்னை அப்படியே வாரி எடுத்துக் கொண்டு முத்தமாரி பொழிந்தாள்.

என்னதான் பிடிவாதக்காரியாய் இருந்தாலும் அவள் என் அம்மா. நான் அவள் பிள்ளை,




"ரெண்டு பேரும் தலைக்கு ஒரு மாத்திரை வாங்கிக் கையோடே வச்சுக்கலாமாடா?"

"ஏண்டா அவசரப்படறே? ரிசல்ட் வரட்டுமேடா, அப்புறம் பார்த்துக்கலாம்!

—P. கலாசாமி, தூத்துக்குடி.

---

"அம்மா! நம் வீட்டிற்குப் போகலாம், அம்மா" என்று சொன்னேன் மெல்ல, மெல்ல. எங்கே அவள் வரமாட்டேன் என்று கூறிவிடுவாளோ என்ற பயம்.

அம்மா நின்றபடியே கொஞ்ச நேரம் யோசித்தாள். பிறகு என்ன தோன்றிற்றோ என்னவோ, "வா கண்ணு, போகலாம்" என்று வேலைக்காரியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

தெருமுனையை அடைந்திருப்போம். அப்பா எதிரில் கையில் ஒரு காகிதத்துடன் வந்துகொண்டிருந்தார். என்னையும் அம்மாவையும் பார்த்தவுடன், "அட பயலே! எனக்கு முன்னால் போய் அம்மாவை அழைத்துக் கொண்டு வந்துவிட்டாயே!" என்று என்னைத் தூக்கிக்கொண்டார்.

பிறகு அம்மாவைப் பார்த்து, "அந்த ஆபீஸ் காகிதம் சட்டைப் பையிலேயே இருந்தது. அதைக் கவனிக்காமல் வண்ணானுக்குப் போட்டு விட்டேன் போலிருக்கிறது. வண்ணான் இன்று கொண்டு வந்து கொடுத்தான்" என்றார்.

அம்மா ஒன்றும் பதில் பேசவில்லை. இதற்குள் வீடு வந்துவிட்டது.

அப்பா தொடர்ந்தார். "துணிகளை வண்ணானிடம் போடும்பொழுது நீ கொஞ்சம் கவனித்திருக்கலாம். வெளியில் போகும் நேரத்தில் வீட்டுக் காரியங்களை நன்றாகக் கவனிக்கலாம்" என்றார்.

"ஏன், நீங்களே கவனித்துத் துணிகளைப் போடக்கூடாதா?" என்று பதிலுக்குக் கேட்டாள் அம்மா.

"பின் நீ எதற்காக இருக்கிறாயாம்?" என்று சற்றுக் காரமாகவே கேட்டார் அப்பா.

அம்மாவும் ஏதாவது இடக்காகப் பதிலளிக்கவேண்டுமென்று வாயைத் திறந்தாள்.

அதற்குள் நான், "அம்மா, அம்மா! நீ அப்பாவுடன் சண்டை போட்டுக்கொண்டு தாத்தா வீட்டிற்கு மறுபடியும் போய்விட்டால் அப்புறம் என்னை யார் கவனிப்பார்கள், அம்மா?" என்றேன் பரிதாபமாக.

பெற்ற மனம் இளகிவிட்டது.

"இல்லேடா கண்ணு! இனிமேல் அப்பாவுடன் சண்டை போடமாட்டேன்" என்றவாறு என்னைத் தூக்கிக் கொண்டு அப்பாவின் அருகில் சென்றாள் அம்மா.

இன்றிலிருந்து 'லேடீஸ் கிளப்' மெம்பர் பதவியை ராஜிநாமாச் செய்து விடுகிறேன்" என்றாள் அம்மா, அப்பாவிடம்.

அப்பா சிரித்துக்கொண்டே அம்மாவின் கன்னத்தில் ஒரு செல்லத் தட்டுத் தட்டினார்.

நல்ல அம்மா, நல்ல அப்பா!

## பாரஸீக ரோஜா




நூறு காத தூரம் சென்றதும் . . . . . . . .
இளவரசே! கடற்கரை வந்து விட்டது. இனி நாம் இருவரும் பரிவாரங்களை விட்டு விட்டுக் கப்பலில் புறப்பட வேண்டும்!
சரி
தளபதி! நானும் மர்ஜாமனும் கப்பலில் சிறிது உல்லாசப் பிரயாணம் போகிறோம். நீங்கள் கரையிலேயே காத்திருங்கள்!
அப்படியே
கப்பல் பூதார் இருக்கும் தீவு நோக்கிப் புறப்பட்டது. பல நாட்கள் கழிந்தன.
பூதார் வசிக்கும் தீவு இது தான்! இனி மாறு வேஷத்தில் தான் நீங்கள் வர வேண்டும்
ஆகா, என்ன அழகான தீவு!
அசல் வர்த்தகன் போலவே இருக்கிறீர்கள்!


மர்ஜாமனும் காமரும் கப்பலை விட்டு இறங்கி ஒரு சத்திரத்தை அடைகிறார்கள்.
அரண்மனை போகும் முன் என்னைப் பிரிந்து விட வேண்டும்.
இளவரசே! நீங்கள் ஒரு ஜோஸ்யரைப் போல் நடிக்க வேண்டும்!
அப்படியே. நாம் அரண்மனைக்குப் போகலாம்.
அரண்மனை வாயில் . . . . . .
ஜோஸ்யமோ ஜோஸ்யம்! தீராத வியாதியெல்லாம் தீர்த்து வைப்பேன்!
அரசே! அவனை அழைத்து வரட்டுமா?
சரி
யார் நீ? இங்கே ஏன் வந்தாய்?
சலாம் அரசே!
ஆள் அழகாகவும் வாலிபனாகவும் இருக்கிறான்.
பாவம்! இவன் கதி?

(தொடரும்)



# லீடர் மணி

'ஆர்வி'

அந்த முரட்டு ஆசாமி யார்?

அவன் முராரி என்ற பையனைத் தான் தேடி வந்தானா அல்லது மணியை யாரென்று அவனுக்குத் தெரியுமா? அவன் தன்னை ஸி. ஐ. டி. குப்புசாமி என்று சொல்லிக்கொண்டது உண்மை தானா அல்லது பொய்யா? மணியின் அப்பா வந்திருக்கிறார் என்று அழைத்து வந்தானே, இந்த வீட்டில் மனித சஞ்சாரத்தையே காணவில்லையே!

இவ்வாறு யோசித்தபடியே மணி வெகுநேரம் அந்த அறையில் உட்கார்ந்திருந்தான். தீப்பெட்டி வாங்கி வருவதாகச் சொல்லிப் போன அந்தக் குப்புசாமி திரும்பவேயில்லை. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகம்போலக் கழிந்தது. அந்த இடத்தை விட்டுத் தப்பிச் செல்லும் யோசனையே மணிக்கு உண்டாகவில்லை. அந்த அறைக் கதவைத்தான் அந்த முரடன் பூட்டிக்கொண்டு போனானே!

மணி கையை மடித்துத் தலைக்கு வைத்துக்கொண்டு தரையிலே படுத்துக்கொண்டான். அசதியினால் சற்று நேரத்திலேயே தூங்கிப் போனான். இடி இடித்தாலும் பூமி பிளந்தாலும் தெரியாத தூக்கம், தன்னை மறந்த தூக்கம்.

வெகு நேரமாக ஒரே பக்கமாகப் படுத்திருந்ததால் ரத்தம் கட்டிப் போயிருந்தது கை. அதனால் தன்னையறியாமல் கண் விழித்த மணி மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டான். ஆனால் திடீரென்று கண்கள் கூசின. அந்தக் கூச்சத்தில் விழிப்பு வந்தது. அவன் கண்களைக் கையால் மறைத்துக்கொண்டு அந்த அறையை நன்றாகப் பார்த்தான். மின்சார விளக்கு நடுவில் எரிந்துகொண்டிருந்தது. ஒரு மூலையில் ஒரு பழைய பெஞ்சிதான் கிடந்தது. அதன்மேல் அந்த முரடன் படுத்துத் திறந்த வாய் மூடாதபடி குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அந்த அறையின் கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது.

மணி சிறிது நேரம் யோசித்துவிட்டு எழுந்தான். மெதுவாகத் தாளைத் திறந்தான். ஆனால் கதவை மட்டும் திறக்க முடியவில்லை. வெளிப்புறம் தாளிடப்பட்டிருந்தது. அதனால் ஏமாந்து போய்த் திரும்ப வந்து படுத்துக்கொண்டான். தூக்கம் வரவில்லை. அந்த அறைக்கு உள்புறமாய் வேறு ஒரு கதவு இருந்தது. ஆனால் குறுக்கே பெஞ்சியைப் போட்டுக்கொண்டு அந்த முரடன் படுத்திருந்தானே. அந்தக் கதவைத் திறக்க வேண்டுமானால் அவனைத் தாண்டிக் கொண்டுதான் போகவேண்டும். இந்த வம்புக்கு என்ன செய்வது என்று மணி சிறிது யோசித்தான்.

பிறகு தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டு பெஞ்சிக்குக் கீழாக மெல்ல ஊர்ந்து, கதவைத் திறந்

தான். அவன் எதிர்பார்த்தபடியே கதவு வெளிப்புறமாய்த் திறந்து கொண்டது.

''க்வாக்—''


குறட்டைச் சத்தம் நீண்டு கொண்டே போய் 'க்வாக்?' என்று கேள்விக் குறி மாதிரி சட்டென்று நின்றது. மணியை அது ஓர் உலுக்கு உலுக்கிப் போட்டது. கதவைப் பிடித்திருந்த கை டங்கென்று சுவரில் இடித்துச் சத்தப்படுத்தியது.

அந்த முரடன் விழித்துக் கொண்டு விட்டான். ''என்னது?'' என்று தலையைத் தூக்கினான். உடனேயே 'உச் உச்' என்று கூசும் கண்களை மூடிக்கொண்டே



கூறிவிட்டு வேறு புறம் புரண்டு படுத்துக்கொண்டான். நல்ல காலம்; மணியை அவன் கவனிக்கவில்லை என்று தெரிந்தது. அந்தச் சில விநாடி நேரம் மணியின், மூச்சே நின்றுவிட்டது. அந்தப் படபடப்பு அடங்கவே பத்து நிமிஷங்களுக்கு மேல் ஆயிற்று.

மீண்டும், ''குர்ர்ர்ர்..கர்ர்ர்'' என்று குறட்டை எழும்பத் தொடங்கியது. மணி பெஞ்சுக்கு அடியிலிருந்து மெல்லத் தவழ்ந்து சென்று, கதவைத் திறந்தான். நல்ல காற்று குப்பென்று அவன் முகத்தில் வீசியது. அவன் வெளிப்புறமாக வந்து, திறந்திருந்த கதவை நைஸாகச் சாத்தினான். நாதாங்கியை இழுத்துத் தாழ்ப்பாள் போட்டுவிட்டான். முரடன் அவ்வளவு சுலபமாகச் சிறைப்படுவான் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.



அவன் விழித்துக்கொண்டு மணியைக் காணாமல் தேடினாலும் அவனால் வெளியில் வர முடியாது. ஆனால் மணி ஒரு சிறிய விஷயத்தை யோசிக்கவேயில்லை. அந்த வீட்டில் முரடனைத் தவிர வேறு யாருமே இருக்க மாட்டார்களா? அந்தச் சிறிய தப்பை உடனேயே ஞாபகப்படுத்துவது போல அவன் நாதாங்கியைப் போட்டதும், ''யாரு?'' என்ற குரல் இருட்டிலிருந்து கேட்டது.

'தலைவலி போய்த் திருகுவலி மாதிரி ஏதடா சங்கடம்?' என்று மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் சுவரோடு சுவராக ஒண்டிக்கொண்டு மூச்சுக் காட்டாமல் நின்றான்.

''யாரது?'' என்று மீண்டும் அந்தக் குரல் கொஞ்சம் அழுத்தமாகக் கேட்டது, குரல் ஒரு கிழவியின் குரல்தான்; நடுக்கக் குரல்!

மணி அசையவில்லை.

''இந்தப் பாழாப்போன பூனை ராத்திரியெல்லாம் என்ன ஆட்டி பண்ணுது!'' என்று முணுமுணுத்தவாறே அந்தக் கிழவி படுக்கையிலிருந்து எழுந்திருந்தாள். ''ம்..ம்..'' என்று முனகிக்கொண்டே விளக்கைப்போட்டாள்.

இதை மணி எதிர்பார்க்கவில்லை. எதிரே மாடிப் படியும் அதற்கு அடியிலே ஒரு சிறிய அறையும் இருப்பதை அவன் கண்கள் கண்டு கொண்டன. நல்ல காலம்; கிழவி திரும்பிச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, இந்த அறையின் கதவை ஏறெடுத்துப் பார்ப்பதற்குள் மணி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தச் சிறிய அறைக்குள் ஒளிந்து கொண்டான்.

கிழவி அவனைக் கவனிக்கத்தான் இல்லை. கவனித்திருந்தாலும் அந்தக் கிழவிக்கு அவ்வளவு பார்வை போதாது என்பது மணிக்கு எப்படித் தெரியும்? குப்புசாமிக்கு எழுத்துத் தெரியாது. இந்தக் கிழவிக்கு ஆளையே தெரியாது. அவ்வளவுதான் வித்தியாசம். இந்தக் கிழவி அந்த முரடனுடைய தாயாக இருப்பாளோ என்று எண்ணமிட்டவாறே மணி அந்தச் சிறிய அறையினுள் நுழைந்தான். 'பொக்'கென்று விளக்கை அணைத்தாள் கிழவி. இருட்டில் ஒன்றுமே புரியாமல் தட்டித் தடுமாறினான் மணி. காலில் கட்டியும் முட்டியுமாகக் கரகரவென்று ஏதோ நொறுங்கிக் குத்தின. கல்லோ கட்டியோ என்று அவன் வேறுபுறமாகத் திரும்பினால் பெரிய மூட்டை ஒன்றின்மேல் போய் முட்டிக் கொண்டான்.

ஆனால் சமாளித்துக்கொண்டு ஒரு மூலையில் ஒதுங்கி நின்று கொள்வதற்கும் அவன் மேலே உண்மையாகவே ஒரு பூனை தாவி விழுவதற்கும் சரியாக இருந்தது. மணி 'பெபெபெ' என்று உளறியடித்துவிட்டான். பூனையோ 'மியாவ்' என்று பெரிதாகக் கத்தி அவனுடைய சத்தத்தைக் கேட்கவிடாமல் செய்துவிட்டது; இல்லையோ அவன் நிச்சயம் மாட்டிக்கொண்டிருப்பான்.

முணு முணுத்தவாறே கிழவி தூக்கத்தைக் கெடுக்கும் பூனைக்குச் சாபம் கொடுத்துக்கொண்டிருந்தாள். 'அந்த இடத்தை விட்டுப் பொழுது விடிவதற்குள் எப்படியடா வெளியேறுவது?' என்று ஏங்கியவாறு மணி திகைத்து நின்றான்.

பொழுது விடிவதற்கு இன்னும் அதிக நேரம் இல்லை என்பது போல, வெகு தூரத்தில் கோழி ஒன்று கூவுவது கேட்டது. மணி அந்த அறைக்கு இருந்த ஒரு ஜன்னலை அண்ணாந்து பார்த்தான். வானத்திலே இருள் வெளுத்து, நட்சத்திரங்கள் ஒளியிழந்து மறைந்து வருவது நன்றாகத் தெரிந்தது. பொழுது விடியுமுன் தப்பித்துக் கொள்ள வேண்டுமே! கிழவி தூங்கித் தொலைந்தால் அல்லவா அந்த இடத்தைவிட்டு வெளியில் போகலாம்!

கிழவி பூனையைத் திட்டுவதை விட்டு விட்டு இருட்டில் தன் படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டு, ''ராம ராமா! கிருஷ்ண கிருஷ்ணா!'' என்று திரும்பித் திரும்பி, குளிர் ஜுரக்காரன் குரல் நடுக்குவது போல் நடுக்கிக்கொண்டிருந்தாள்.

'சரி; நாம் தப்பித்துக் கொண்டால் போலத்தான்!' என்று மணி தவியாகத் தவித்தான்.

மனசு தவிப்பதோடு மட்டும் இருந்தால் [illegible] காலில் ஏதோ மெ[illegible]போல் இருந்தது [illegible] நகர்த்திக்கொ[illegible]லும் ஆபத்து; காலை அப்ப[illegible]லைத்துக் கொண்டிருந்தாலும் ஆபத்து! குறுகுறு என்று அது ஊர்வதைப் பார்த்தால் தேளோ, பூரானோ என்று சந்தேகமாக இருந்தது.

என்ன செய்வான், பாவம்! மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவன் தத்தளித்தான். காலில் ஊர்ந்தது உடனே கீழே இறங்கியது போலிருந்தது. அதன் பிறகுதான் அவன் மெதுவாகக் காலை ஒதுக்கிக் கொண்டான். அப்படி ஒதுக்கிக் கொண்டபோது காலில் ஏதோ வட்டமாக நெரடு முரடாக இடறியது. 'இது என்ன குடியிருக்கும் வீடுதானா, இல்லை, ஏதாவது வங்கு வளையா?' என்று அச்சத்தோடு எண்ணினான் மணி.

''சள சள சள - சல் சல் சல்-'' என்று எங்கேயோ வாசலில் தண்ணீர் தெளிக்கும் சத்தம் சற்றைக்கெல்லாம் கேட்டது. தொடர்ந்து பக்கெட் அடிபடும் சத்தமும் வந்தது. (தொடரும்)

# எங்கள் பகுதி

## * மும்முறையாக்குக

**1-5-55**-ஆம் இதழ் கண்ணனைக் கண்டேன். அட்டைப் படம் தான் என்ன கவர்ச்சி! 'இஞ்சி தின்ற குரங்கு'போல் பொறுமை கலந்த ஏக்கத்துடன் அந்தப் பையனையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

'செய்திகள்' என்ற பகுதி எங்களுக்கு எவ்வளவோ விஷயங்களை அறிவிக்கின்றது. 'அதிர்ஷ்ட எண்கள்' உள்ள தம்பி, தங்கைகளை நிறைந்த மனத்துடன் பாராட்டுகின்றேன்.

'குழந்தைகளே!' என்ற பகுதியில் 'தங்க மாம்பழம்' எழுதும் ராஜி தான் 'குண்டுச் சீமா'வின் ஆசிரியர் என்று கண்டதும் அளவிலா ஆனந்தம் கொண்டேன்.

லீடர் மணியின் சோக நிலையிலும் அவனது நல்ல எண்ணத்தையும் தாராள குணத்தையும் கண்டு என் உள்ளம் பூரித்தது.

'அருமையான சம்பவம்' அருமையாக இல்லை. 'எங்கள் தாத்தா' என்ற கவிதை சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் இருக்கிறது.

எப்பொழுதும் போல் விஞ்ஞானத்தைப்பற்றியே இல்லாமல் பேராசிரியர் மூலம் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். கவி அரங்கில் இரண்டு பாட்டுக்களுமே எளிமையும் இனிமையும் ஆன சொற்களைக்கொண்டு தீட்டப்பட்டிருக்கின்றன.

'வைகுண்ட ஏகாதசி' நாடகம் சுமார். 'மாயப் பெட்டி' நன்றாகவே உள்ளது. கடைசியில் கனவு என்று முடித்திருப்பதனால்தான் இதிலுள்ள சம்பவங்களை நம்ப முடிகிறது. பாராட்டத் தக்கது.

'பலி' என்னும் கதை இவ்விதழ் கண்ணனுக்கே ஒரு சிகரம். வீண் மூடநம்பிக்கைகளுக்கு இடமளிக்கக்கூடாது என்பதைக் காட்டுகிறது.

'கடலமயின் வெற்றி' நல்ல கருத்தமைந்த கதை. எத்தகைய இடையூறு நேர்ந்தாலும், எடுத்த காரியத்தை நிறைவேற்றவும், நமது கடமையை உணர்ந்து நடக்கவும் இந்தக் கதை போதிக்கிறது.

'பாரசீக ரோஜா' அடுத்த இதழ் எப்பொழுது என்ற ஆவலைத் தூண்டுகிறது. 'மிஸ்டர் மியாவ்' பரவாயில்லை. சமயோசிதம் சங்கடத்தை நீக்கும் என்பதற்கு இது ஓர் விளக்கம்.

'சுக்ரீவன் தொட்டி' மிக நல்ல கதை. நாம் வெறுக்கும் அற்பப் பிராணிகூட சில சமயங்களில நமக்கு உதவுகிறது.

'எங்கள் பகுதி'யில் மூன்று கடிதங்களுமே பிரமாதம்.

'குண்டுச் சீமா' ரகளை பண்ணிக்கொண்டு எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் காட்சி சிரிப்பில் ஆரம்பித்து வயிற்றுவலியில் கொண்டு விட்டுவிட்டது. ஒரு காட்சியே இப்படி இருந்தால் கதை!.... 15-5-55-இல் 'குண்டுச் சீமா'வை வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறோம். மொத்தத்தில் எல்லாப் பகுதிகளுமே இன்பம் தரக்கூடியனவாக இருக்கின்றன.

குறைந்த விலையில் சிறுவர்களுக்காகச் சிறந்த விஷயங்களை எடுத்துரைக்கும் கண்ணனை மாதம் மும்முறையாக்கும்படி நம்நாட்டுத் தமிழ்த் தம்பி தங்கைகள் சார்பில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மு. வேங்கடராமன், நத்தம்.

## ஊக்கம் தருக!

**1-5-55** கண்ணன் அட்டைப்படம் தத்ரூபமாயிருக்கிறது. பக்ஷணத்தைத் திருடிவிட்டு விழிப்பவர்கள் நம்மில் பலர் உண்டு. லீடர் மணியின் கனவு நினைவு ஆகுமா அல்லது அவன் இன்னும் பல இன்னல்கள் அடைவானா என்று துடிதுடிக்கச் செய்கிறது கதை.

'கேளுங்கள் சொல்கிறேன்' என்பதைப் படித்து அரிய விஷயங்களை அறிகிறோம். குழந்தைகளின்

* 3 ரூபாய் பரிசு பெற்ற கடிதம்

கவிதை உள்ளத்தைத் தட்டி எழுப்ப, 'பாலர், கவி அரங்கம்' மிகவும் உதவியளிக்கிறது. கதைகளில் வைகுண்ட ஏகாதசி, பலி, மாயப் பெட்டி முதலியன சர்வ சாதாரணம். சுக்ரீவன் தொட்டி ஒரு புது முயற்சி. பலி ஒரு நல்ல கருத்தை வெளியிட நினைத்து, சப்பென்று முடிகிறது. கடமையின் வெற்றி பழமையான கதை. ஆனாலும் விரும்பிப் படிக்கும்படி ஒரு கருத்தை வெளியாக்குகிறது. இவ்வித ரசமான சம்பவங்களைப் பாரதம், ராமாயணம் முதலிய இதிகாசங்களிலிருந்து வெளியிட்டு எங்கள் அறிவுக் களஞ்சியத்தை நிரப்புவீர்கள் என்று நம்புகிறேன். அதிருஷ்ட நம்பரை அடையும் சில அதிர்ஷ்டக்காரர்கள் இருந்தாலும் அதிர்ஷ்டமில்லேயே என ஏங்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகம். இதைக் கவனித்தால், புத்திப் பரீக்ஷை வைத்து, விடுமுறை முடிவதற்குள் ஏதாகிலும் பரிசுத் திட்டம் வகுத்தீர்களானால், எங்கள் அதிருஷ்டத்தை மட்டும் நம்பாமல், சாமர்த்தியத்தையும் நம்பி ஊக்கம் பெறுவோம்.

எங்கள் பகுதியே ஒரு கட்டுரைப் போட்டிபோல் அமைந்து உள்ளது. கற்பனைக் கண்ணால், பல ருசிமிக்க சம்பவங்களை எண்ணி எண்ணி, கடிதத்தை எழில்மிக்க பூஞ்சோலை ஆக்குகிறார்கள் அல்லவா? ஆயினும் யாவரும் புகழ்ச்சியே தங்கள் குறிக்கோளாகக் கருதி, சபாஷ் போட்டு வந்தால் தன் பிள்ளையின் முன்பே அவன் பிரதாபங்களைப் பறைசாற்றி வரும் பெற்றோர்களைப் போல் அல்லவா ஆகிவிடும்?

அதன் வளர்ச்சியில் ஆவல் கொண்டுள்ள எங்களுக்கு மேன் மேலும் புதிய அம்சங்களைப் புகுத்தி ஆவலை ஊக்குவீர்கள் என நம்புகிறோம்.

—டி. எஸ். ராஜகோபாலன், செங்கல்பட்டு.

## கண்டிப்பும் மன்னிப்பும்

அன்புடையீர்,

15-5-55 கண்ணன் இதழில் பாலர் கவி அரங்கத்தில் வெளியான "வெயில்" என்ற கவிதையை நான் சமீபத்தில் ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். அதையே அந்தத் தம்பி அப்படியே காப்பியடித்து எழுதியிருக்கிறான். இனி இம்மாதிரி காப்பியடித்து எழுதுவதைக் கண்டித்து அந்தத் தம்பிக்கு எழுதவும்.

குயிலன், கோனேரிராஜபுரம்.

அன்புடையீர்,

பாலர் கவி அரங்கத்தில் 'குயிலன்' என்ற தம்பி கோடைகாலத்தைப்பற்றிப் பாடி இருக்கிறார் அல்லவா? கோடை ரொம்ப ரொம்பக் கடுமை போலும்!.. சொந்தக் கற்பனைக்கும் அயலார் கற்பனைக்கும்கூட வித்தியாசம் தெரியாத அளவு கடுமை! வேறு ஒரு பத்திரிகையில் "பொல்லாத கோடை" என்ற தலைப்பில் ரூபாய் பதினைந்து பரிசு பெற்ற பாடலை (என்னுடைய பாடலை என்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்கிறேன்) அப்படியே (நான்கு வரிகள் நீங்கலாக) எடுத்துத் தீட்டிவிட்டார். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்:

கோடைகாலம் வந்திருச்சு<br>
குஷியெல்லாம் போயிருச்சு<br>
கொதிப்பெடுத்து போச்சு<br>
தையோ-கடவுளே<br>
கொடுமையான வெளியிலாலே-<br>
கடவுளே.

—இந்தக் 'கடவுளே' என்கிற வார்த்தைகளை மாத்திரம் 'கட உள்ளே!' என்று மறைத்துவிட்டு மீதியை அனுப்பிவிட்டார். கடவுள் அவரை இந்தத் திருட்டுக்கு மன்னித்து, சொந்தக் கற்பனா சக்தியை நிறையக் கொடுக்கட்டும்.

எஸ். மீனாட்சி, திருநெல்வேலி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன்

## அதிருஷ்ட எண்கள்

இதோ பக்கத்தில் ஓர் எண் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம். எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

**பரிசு விவரம்**

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 15/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 10/- |
| மூன்றும் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா) | ரூ. 5/- வீதம் |
| நாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா) | ரூ. 2/- வீதம் |
| மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு | ரூ. 50/- |

**உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்**

**கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்**

# பேனு நண்பர்கள்

1. இ. முத்துகிருஷ்ணன், C/o இசக்கிமுத்துப் பிள்ளை, பணகுடி.

2. எஸ். எம். வேணுகோபால், 105. கச்சேரித் தெரு, சத்தியமங்கலம், கோயம்புத்தூர் ஜில்லா.

3. K. J. சேதுராமன், 2628, கீழ ராஜவீதி. புதுக்கோட்டை.

4. C. S. K. நவநீதம், 117. அரண்மனைத் தெரு, மதுரை.

5. V. தனசேகரன், 30. திருவேங்கடமுதலித் தெரு, பெரியமெட், சென்னை-3.

6. S. சிவலிங்கம், 'சகுந்தல வில்லா', கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், இலங்கை.

7. V. சுந்தரமூர்த்தி, S/o B. S. K. விசுவநாதன், 87, மூங்கப்பாடித் தெரு, குகை, சேலம்.

8. S. S. நிவாஸ், 86, மூங்கப்பாடித் தெரு, குகை, சேலம்.

9. P. A. S. வேங்கடாசலம், S/o டாக்டர் P. S. A. சர்மா, 65, பாலகோபாலபுரம், பொள்ளாச்சி.

**புதுவை** கிளைக் கழகக் கூட்டம் 3-4-55 மாலை திரு. தர்ம சொரூபர் அவர்கள் தலைமையில் நடந்தது கண்ணன் ஆசிரியர் மற்றும் பல பிரமுகர்களிடமிருந்து வந்த வாழ்த்துக்கள் படிக்கப்பட்டன. தலைவர் தமது உரைக்குப் பின்னர் கிளைக்கழக போர்டையும் அறிக்கை போர்டையும் திறந்துவைத்தார். செயலாளர் குமாரி பி. பிரேமா நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது.

(Regd. as News paper in Ceylon.) **Reg. No. M. 5542**

# கண்ணன் வெளியீடுகள்

கலைமகள் காரியாலயத்திலிருந்து வெளிவருபவை **கண்ணன்** வெளியீடுகள், ஐந்து முதல் பதினாறு வயதுள்ள குழந்தைகளுக்கு ஏற்றவை. நல்ல காகிதம்; அழகான படங்கள்; பெரிய எழுத்துக்கள். குறைந்த விலையில், சிறந்து விளங்குபவை கண்ணன் வெளியீடுகள்தான். இது வரையில் 21 புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல அடுத்து அடுத்து வரவிருக்கின்றன.




**விரிவான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.**

## இப்போது கைவசம் உள்ளவை:

1. அசட்டுப் பிச்சு ரூ.
2. பவழவல்லி அணா 1
3. ஜக்கு ,,
4. விஞ்ஞானம் பேசுகிறார் ,, 8
5. சமர்த்து மைனா ,,
6. மின்னல் அரக்கன் ,,
7. ஏரிக்கரை மாளிகை
8. மாஸ்டர் பாலகுமார்
9. தூங்கும் அழகி ,,
10. நீச்சல் பழக்கம் ,,
11. கோழி விதைத்த நெல் ,,
12. பார்வதியும் ஏழு சித்திரக் குள்ளர்களு

பாக்கிப் புத்தகங்க
விரைவில் கிடைக்

* ஸெட்டாக வாங்
ரூ. 4/- தான்
தபால் செலவு தல

**புத்தகங்களைத் தனித்தனி வாங்கும் கண்ணன் க அங்கத்தினர்களுக்கு 12 கமிஷன் உண்டு**